# வேணீ ஸம்ஹாரம்

அல்லது

# தர்ம விஜயம்

[illegible]

சருக்கை ராகவாசாரியன்
இயற்றியது.

சென்னை

1919

All Rights Reserved] [Price 8 As.

## NOTE.

Author's permission in writing is necessary for enacting this drama.

# நூன்முகம்.

முத்தமிழி லொன்றாகிய நாடகமெனும் பகுதி வளருமாறு பற்பலநூல்கள் இக்காலத்தில் இயற்றப் பட்டுள்ளனவாயினும், வீரரஸ ப்ராதான்யமாயுள்ள நாடகங்கள் அருமையாயிருத்தலின், மஹாகவி பட்டநாராயணன் இயற்றியுள்ள வீரச்சுவை மிகுந்த வேணீஸம்ஹாரத்தைத் தமிழில் நாடகரூபமாய் அமைக்க அவாவுற்றேன். "பாரத: பஞ்சமோ வேத:" என்றும், "நீடாழி யுலகத்து மறைநாலோ டைந்தென்று நிலைநிற்கவே—வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதஞ் சொன்ன நாள்" என்றும் வரும் வாக்யங்களால் யாவராலும் ஐந்தாம் வேதமெனப் போற்றப்படும் மஹாபாரதகதையில், உத்யோகபர்வத்தினின்று சல்யபர்வ முடியவுள்ள கதையின் ஸாரத்தை, ஆங்காங்குச் சில புனைந்துரைகளுடன், நாடகரூபமாக அம்மஹாகவி, வடமொழியில் அத்புதமாக அமைத்துள்ளார். நாடகங்களை ஆதரிப்போர்க்கு ஸுகத்தையும் உத்ஸாஹத்தையு மளிக்குமாறும் இக்காலத் தமிழர்சுவைக்கு ஏற்குமாறும், ரங்கஸந்நிவேசங்களுக்குத் தகுமாறும், ஒன்றையும் விலக்காது காலத்திற்குள் நடித்து முடிக்குமாறும், ஸம்ஸ்க்ருத நாடகத்தின், நான்கு, ஐந்து, இவ்விரண்டு அங்கங்களை விலக்கி, கர்ணனது வியோகஸமயத்தில், பகவான் அவற்குக் காக்ஷியளித்து உய்யக்கொண்ட கதைப்பகுதியைச் சேர்த்து, இந்நாடகத்தை ஒருவாறு அமைக்கலானேன். வீரரஸத்தை, தமிழ்ப் பாஷையின் சொற்கள் கொண்டே நன்கு விளக்குவது அருமை யன்றாயினும், இனிமை பயத்தல் நோக்கி, சிற்சில விடங்களில் ஸம்ஸ்க்ருத பதங்களை ப்ரயோகித்திருப்பதோடு, அப்பதங்களின் ரூபங்களை வடமொழி உச்சாரணப்படியே அச்சிலும் அமைத்துள்ளேன்.

மஹாபாரதகதை யாவரு மறிந்துளதே யாதலின், இந்நாடகத்தின் பூர்வகதையை இங்கு விவரிப்பது மிகையாம்.

இந்நாடகத்தை வெளிப்படுத்த எனக்கு உதவிபுரிந்த ஸ்ரீமான் N. ஸ்ரீனிவாஸாசார்யர் B. A., L. T. அவர்கட்கும், ஸ்ரீமான் ராமநாதபுரம் மு. ராகவையங்கார் அவர்கட்கும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

திருவல்லிக்கேணி }
19-12-1919. }

S. R.

## நாடகபாத்ரங்கள்.

—:0:—

| | |
|---|---|
| க்ருஷ்ணன் | பாண்டவ ஸஹாயன். |
| தர்மபுத்ரர் | பாண்டுபுத்ரர், (பஞ்சபாண்டவர்.) |
| பீமஸேனன் | |
| அர்ஜுனன் | |
| நகுலன் | |
| ஸஹதேவன் | |
| துர்யோதனன் | த்ருதராஷ்ட்ரன் புதல்வரில் மூத்தோன். |
| துச்சாஸனன் | துர்யோதனன் முதல் தம்பி. |
| கர்ணன் | துர்யோதனன் உயிர்த்தோழன்; அங்கராஜன். |
| க்ருபாசார்யர் | பாண்டவர்க்கும், கௌரவர்க்கும் ப்ரதம வில்லாசிரியர். |
| அச்வத்தாமா | த்ரோணர் புதல்வன். |
| அச்வஸேனன் | த்ரோணரின் ஸூதன். |
| ஜயந்தரன் | பாண்டவ கஞ்சுகி. |
| விஜயந்தரன் | கௌரவ கஞ்சுகி. |
| சார்வாகன் | ஓர் ராக்ஷஸன்; துர்யோதனன் நண்பன். |
| குந்திதேவி | பாண்டு மனைவி, (பாண்டவர் தாய்.) |
| த்ரௌபதி | பாண்டவர் மனைவி. |
| பானுமதி | துர்யோதனன் மனைவி. |
| ஜயத்ரதன் மாதா | |
| புத்திமதி | த்ரௌபதியின் சேடி. |
| ஸுவதனை | பானுமதியின் ஸகி. |
| தரளிகை | பானுமதியின் சேடி. |

ஸ்ரீ:

# வே ணீ ஸ ம் ஹா ர ம்

## ஸூத்ரதாரன் ப்ரவேசம்.

### நா ந் தி.

தன்னையே கதியாகத் தான்பிறரை நினையாத தையலாளம்
மன்னுமெழில் ருக்மணிதன் மனக்கருத்து நிறைவேற மாறந்நங்கை
முன்னவனோ டெறிசிசுபா லன்றனையு முரணழித்த மூர்த்திவாய்மை
துன்னுமுயர் வீரமுளார் துயரகற்றிக் காத்தளிக்குஞ் சுடரேபோற்றி.

(என்று புஷ்பாஞ்ஜலி செய்து)

கன்ன பாகமெய் களிப்பதோ ரளப்பினூல் கதைமுன்
சொன்ன பாவலன் றுகளறு சுகன்றிருத் தாதை
யன்ன பாரதந் றன்னையோ ரருமையோ டருளும்
மன்னு மாமறை முனிவன்றன் பலரடி பணிவாம்.

அவையிலிருக்கும் ஆன்றோர்கட்கு அடியோங்கள் சொல்வதொன்றுண்டு. இதோ நாங்கள் கொண்டு பூஜைசெய்யும் புஷ்பங்களைத் தவிர்த்து, இன்று நாங்கள் ஆடப்புகும் நாடகமாம் சொன்மாலையி லடங்கிய புஷ்பங்களு முண்டேயாம். தேனையே யுண்டு களிக்கும் சிறுவண்டைப்போல், இவற்றுள் ஆங்காங்குப் பரந்துநிற்கும் நற்சுவையை யேற்று மற்றதை அகற்றுவிராக. ம்ருகராஜனென்று பெயர்பெற்ற பட்ட நாராயணன் இயற்றியுள்ள ஸம்ஸ்க்ருத நாடகத்தை ஆதாரமாகக்கொண்டு, தமிழ்ப்பாஷையிற் செய்துள்ள வேணீஸம்ஹாரமெனும் நாடகத்தை இன்று ஆடப்பெற்றோம். தமிழ்ப் பாஷையில் ஓர் புதிய நாடகத்தைப் பார்க்கும் அவாவினாலாவது, இதைச் செய்தவரிடத்திலோர் அன்பினாலாவது, இதற்கு முதனூலாகவுள்ள பாரதமென்னும் மஹாகதையினோர் கௌரவத்தினாலாவது, இந்நாடகத்தை, ஆன்றோரனைவரும் கவனங்குன்றாது அனுபவிப்பரென்பதே எங்களது கோரிக்கை.

முன்சொலாகிய சொல்லெலா முழுதுணர் முனிவன்
றன்சொலாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
தென்சொலாலுரை செய்தலிற் செழுஞ்சுவை யில்லாப்
புன்சொலாயினும் பொறுத்தருள் புரிவரே புலவோர்.

(திரைக்குள்)

பராசர நாரத தும்புரு முதலான முனிவர்குழாமெல்லாம் பின்படர, பரதகுலத்துக்கோ ரிதம்செய்ய வேண்டி, தானே தூதனுய்நின்ற யாதவகுலதிலகன், தேவகியின் மணிவயிறு வாய்த்தவன், அரசுக்கரசாய துர்யோதனனிடமேகத் தருணந்தான் வாய்த்தது.

ஸூத். (ஸந்தோஷத்துடன் கேட்டு) ஆஹா! உலகனைத்தையும் உண்டுமிழ்ந்தெடுத்த முதற்பெருங்கடவுள், ஆக்கி அளித்து அழிக்குமாண்டவன், அண்டமெல்லாம் படர்ந்தவிண்ணவன், தானே இப்பரதகுலத்தைத் தன் பரமக்ருபையால் அநுக்ரஹித்தனனே! இவ்வரசர்குலமும் பேறுபெற்றது. எப்பாந்த காலத்துப் பேரழல்போன்ற இப்பாரதப் போரை யடக்கி யருளவே, கஞ்சனை யடர்த்த யிக்காளை, ஸ்வயமே ஸந்தி செய்வோனாயினன்.

இருப்பகையாம் போரழலே யினிதவித்துப் பாண்டவரும்
வருப்பெருமை மாதவனும் வளப்பெருகி வாழ்ந்திடுக
அருப்புவியைச் செங்கோலத் தலங்கரித்தே முழுதளித்துப்
பெருஞ்செயலோன் றில்லாது பிழைத்திடுக கௌரவரே.

(திரைக்குள் ஆணவத்துடன்) அடே! மதியிழந்தவனே! விண்ணில் மங்களம் பாடும் வேழுக்காப்பையலே! குருராஜன் பெற்ற பிள்ளைகள் பிழைத்திருக்கவோ, நானிருக்குங்கால்?

அரக்குமாளிகை யமைத்தன லிட்டதும்
அன்றருந்த விஷங்கலந் துற்றதும்
இரக்கமின்றிப் பெருஞ்சபை காணவே
யெம்மனோர்க்கவ மான மிழைத்ததும்
சுரக்குமாவியுஞ் சொத்துங் கவர்ந்திடுஞ்
சூழ்ச்சியாகுமன் றேவினி த்ரோபதை
பரக்குங்கூந்தலைப் பார்த்துயி ரோடுநான்
பாரினிற்க அவர்பிழைப் பார்களோ.

ஸூத். இதுவென்! (பின்னேக்கி) ஹா ஹா! இதோ வருகின்றுன். வாஸுதேவன் சென்று, கௌரவரைச்சேர்த்து ஸந்தியொன்றமைப்பதைப் பொறுக்காது, அனைவரையும் விழுங்குவோன்போல, கோபம்மிகுந்த பீமன், ஸஹதேவன் பின்

ன்றோடர, இங்கேயே வருகின்றான். இனி, இவன் எதிர்நிற்பது ஸரியல்ல. அப்புறம் போய்விடுதலே நலம். (செல்லுதல்.)

---

# முதல் அங்கம்

## முதல் காட்சி

(சீறிய சிங்கம்போல் பீமன், ஸஹதேவன் பின்றொடர ப்ரவேசித்து)

பீமன். அடே மதியிழந்தவனே! மண்ணில் மங்கலம்பாடும் வேஷக்காரப்பையலே! த்ருதராஷ்ட்ரன் பெற்ற பிள்ளைகள் பிழைத்திருக்கவோ, நானிருக்குங்கால்?

"அரக்குமாளிகை யமைத்தனலிட்டதும்........"

(என்பதைச் சொல்லுதல்.)

ஸஹ. (நயமுடன்) ஐய! பொறுத்திடுக. பரதபுத்ரன் சொல் நமக்கு அனுகூலமானதே. அவன் சொல்லிய சொல்லும் உண்மையே. கௌரவரனைவரும், உதிரம்பெருக அங்கமெலாம் வெட்டுண்டு அசையாது கிடப்ப ரென்றல்லவோ அவன் கூறியது.

பீமன். (பரிஹாஸத்துடன்) ஆஹா! பெரியப்பன் பெற்ற பெரியோரே தாம் அவர். அவரைக்குறித்து அமங்களம் பேசிடலாகுமோ. போதும். அவரையு நம்மையு மிணக்கிப் பேசிடவல்லவோ அப்பெருமான் சென்றது!

ஸஹ. அகண்டராஜ்யமு மகப்பட்டதென்று அகங்காரங்கொண்ட அக்கௌரவரை, நம்மரசர்மட்டும் தடுக்காதிருந்தால், நாம் எளிதில் விட்டிருப்போமா?

பீமன். உண்மையேயது; ஆதலினாற்றான், இன்றுமுதல் நான் உங்கட்கு வேறுபட்டவன். புவிதனிற் பிறந்த அந்நாள் துவக்கி அவருக்கோர் பெரும்பகை படைத்தேன். அப்பகைக்குக் காரணம், அண்ணனுமல்ல; அர்ஜுனனுமல்ல; இரட்டையரான நீவிருமல்லீர். ஸஹதேவா! கேள். கழித்திடத் தழைத்திடும் ஜராஸந்தனது மார்பத்தை யன்று பிளந்தது போல், இன்று பேசிடும் ஸந்தியையும் சினம் கொண்டு முறிப்பேன் யான்; நீவிர் பொறுத்த முயல்மின்.

ஸஹ. இவ்வாறு தாம் கோபம்கொண்டால், நமதையன் ஒருகால் மனம்நொந்து வருந்துவர்.

பீமன். என்ன! ஐயன் மனம் நொந்து வருந்துவர்! அவ்வேந்தனும் வருத்தமென்பதை யறிவரோ! பாராளும் படர்செல்வம் பெருகு பாஞ்சாலன் பெண்மணிதான், பூவேந்த ரவைக் களத்திற் பட்டபாடனைத்தும் பார்த்ததையும், நாடெலாமறிய நெடுங்கான மேகி மரவுரியே கூறையாக்கி, ஊனையே தின்னு மீனருடன் கலந்து நாம் நின்றதையும், விராட னில்லத்தேகிப் பெருமையிழந்து இழிஞரேயாகி ஈனத்தொழில் புரிந்ததையும் மறந்தனரே, நம் நின்மலரும். அத்தகையபுனிதர், நான் மனம்நொந்து வருந்துங்கால், வருத்த மடைவரேதான். ஆயினும், அக்குருடன்குமரர்மீதோ, கோபமே கொள்ளார். ஸஹதேவா! நீ போகலாம்; நீடித்த நாளாய் நிகழ்ந்த பகையாற் கொதித்தெழும் பீமனது இவ்வசனத்தை, அவனே சொன்னதாக அரசர்க் கறிவிப்பாய்.

ஸஹ. என்னென்று?

பீமன். உம்மதாணையாங் கடல்கட வாதிருந் தொழிந்தெம்
செம்மைமானமு மிழந்தனம் சீறியென் கதையால்
வெம்மையார்குரு குலத்தரை வீட்டுநா ளிதுவே
எம்மையாள்குரு நீரிலை யடிமைநா னிலையே. (என்று முன்செல்ல)

ஸஹ. ஹா! அண்ணன் பாஞ்சாலியின் கூடத்துக்குச் செல்கின்றனரே! ஈதென்னவாகுமோ!

பீமன். (திரும்பிவந்து) ஸஹதேவா! நீ போய் ஐயனை அடுத்திடு. நான் ஆயுதசாலைக்குச் சென்று ஆயுதம் பூண்டுவருவன்.

ஸஹ. ஐய! அது ஆயுதசாலையல்லவே. பாஞ்சாலியின் பாங்கான கூடமல்லவோ?

பீமன். (ஸந்தேஹத்துடன்) என்ன! ஆயுதசாலையன்று? பாஞ்சாலியின் மாடமா? போகட்டும். (புன்சிரிப்புடன்) நான் பாஞ்சாலியைக்கண்டு ஆலோசிப்பதும் ந்யாயமே. (ஸஹதேவன் கையைப் பிடித்து) ஸஹதேவா! வா. நாமிருவரும் அங்கேயே செல்வோம்.

(இருவரும் செல்லுதல்)

# முதல் அங்கம்

## இரண்டாவது காட்சி

[புத்திமதி யெனும் சேடி சண்கலங்கி நிற்கும் த்ரௌபதியை ஆற்றிக்கொண்டு வருதல்.]

புத்தி. அம்மணீ! வேண்டாம். வேண்டாம் அம்மணீ.

த்ரௌ. ஐயோ! என்ன பாபம் செய்து நான் பெண்ணாய்ப் பிறந்தேனோ! பட்ட பரிபவமெலாம் போதாதோ! அடி புத்திமதீ! நம்மவர்க்கும் கௌரவர்க்கும், அரசைக்குறித்துப் பொறாமையும் பகையும் நெடுக வளர்ந்திருப்பது உண்மையேயாயினும், பானுமதி யென்னிடம் பகைபாராட்டக் காரணந்தா னென்னவோ? நிரபராதியான என்னை, அவள் அவமானம் செய்யவு மாயிற்றே!

புத்தி. அம்மணீ! அவள் மனம் புண்ணாகும்படி, அவளுக்குத் தகுந்த பதில் நான்தான் சொல்லிவிட்டேனே.

த்ரௌ. ஆயினும், அவள்பேரிற் குற்றமென்ன!

மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்றுதமக் கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தா
லன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையே
னென்று முடிப்பதினி யெம்பெருமா னென்செய்வேன்.

ஐயோ! நமது அரசர்க்கு ஏனோ இந்தப் புத்தியுண்டாகவேண்டும்? ஐந்து க்ராமங்களைப் பெற்றுக்கொண்டு ஸுகமாயிருந்தால், புத்திமதீ! இந்தக் கூந்தலை நான் முடிப்பதேது; என் சபதம் நிறைவேறுவதேது? வஞ்சகத்தால் நம்மவரை ஸபைக் கழைத்து, பாழுஞ்சூதினால் அனைத்தையும் அபகரித்தது போதாதென்று, வெளிவரக்கூடாத என்னை அந்தப்பாபி, இழுத்துவந்து ஸபையில் நிறுத்தி, 'மாடனைய மங்கையே' என்று ஆரவாரித்து, என் துகிலுரிந்தனனே! அப்பொழுது,

தண்டிருந்த திவர்காத்திற் றனுவிருந்த தவர்காத்தில்
வண்டிருந்த பூங்குழன்மேன் மாசிருந்த தெனவிருந்தேன்
கண்டிருந்தா ரெல்லோரும் கருதலர்பா லூர்வேண்டி
யுண்டிருந்து பிழைப்பதற்கே யுரைக்கின்றா ருத்தமரோ.

புத்திமதீ! ஆயுதபாணிகளாயிருந்த என் கணவர், பெட்டிப் பாம்பைப்போல் அடங்கியிருந்தார்களே. ஏன்? அதுவும், நம்மரசர் மனதுக்கு விரோதம் செய்யலாகாதென்றல்லவோ? அக்காலத்து, எனக்குப் பேருதவிபுரிந்து என் மானம் காப்பாற்றின அந்த மாதவனே, என் பரிபவமெல்லாம் தெரிந்தும், இன்று இவர்கள் பேச்சுக் கிணங்கி, ஐந்து க்ராமங்கள் கொடுப்பது என்னும் வகையைக்கண்டு ஸந்தி செய்வதற்காகத் தூது போயிருக்கின்றனரே! ஹே, கோபாலா! உனக்கும் இது ஸரிதானோ? அடியார்களுடைய ப்ரதிக்ஞையைத் தனதாக பாவிக்கும் நீ, என் சபதத்தைமட்டும் பொய்யாக்கலாகுமா? அல்லது இதுவும் உன் திருவிளையாட்டா? துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்ய அவதரித்த ஆண்டவனே! அடியாள் எண்ணம் கைகூடுமாறு அருள்புரிய வேண்டும். என் கணவர் செய்த ப்ரதிக்ஞைகளும் நிறைவேறவேண்டும்.

புத்தி. உமக்குண்டான துக்கத்தை, கௌரவரிடத்தில் அடங்காக் கோபங்கொண்ட பீமனே போக்கிடுவார். அதோ அம்மணீ! அவரே, இளையவர் பின்றொடர இங்கேயே வருகின்றார். தமது துக்கத்தை வெளிக்காட்டா திருக்கவேண்டும். அவர்கள் இங்கு வந்தடைந்தபிறகு நாம் செல்லலாம்; ஒருபுறமாய் இப்பொழுதிருப்போம்.

(பீமனும் ஸஹதேவனும் ப்ரவேசித்தல்.)

பீமன். ஸஹதேவா! நமதையன் குருகுலத்தவருடன் கூடிக் குதிக்கலா மென்றெண்ணி நம்மை யெவ்விதம் வருத்துகின்றனர் பார்த்தனையா? (என்று தரையி லுட்கார எத்தனிக்க)

ஸஹ. ஐய! இதோ ஓராஸனமும் இருக்கின்றது. க்ருஷ்ணகமனம் வரையில், இதில் சற்று இனிதிருக்கலாமே.

பீமன். (யோசித்து) க்ருஷ்ணகமன மென்றனையே. அதனால் என் மனம் ஏதேதோ எண்ணத்துணிந்தது. ஸஹதேவா! பெருமானாகிய கண்ணனை, எவ்வகையால் ஸந்தி செய்வதென்றெண்ணி ஸுயோதனனிடம் அனுப்பினார், நமதையன்?

ஸஹ. ஐய! க்ராமங்கள் ஐந்து கொடுத்திடுவதென்று.

பீமன். (செவிகளைப் பொத்திக்கொண்டு) அந்தோ! அந்தோ! இறைவனை அஜாதசத்ருவுக்கும் இவ்விதம் மதியும் குறைவதேன்! ஹா! என்னிதயம் நடுங்குகின்றதே! (திரும்பிநின்று)

படைபிடிக்கும் ஜாதியான் பாழ்சூதுக் காயைக்
கடைப்பிடித்த தாலிக் கதி.

புத்தி. (பீமனருகிற் சென்று) வாழி வாழி. மஹாவீரன் வாழி.

பீமன். (செவியிற் கொள்ளாது) "படைபிடிக்கும் ஜாதியான்... .."
[என்பதைச் சொல்லுதல்]

புத்தி. (திரும்பிவந்து) அம்மணீ! வீரர் கோபம் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது.

த்ரௌ. அப்படியா! ஆனல், இவ்விதம் கோபமாய்ப் பராமுகமாயிருப்பதே எனக்கோரின்பத்தைத் தருகிறது. இங்கேயே தனித்திருந்து நாத னுரைப்பதைக் கேட்டுணர்வேன்.

பீமன். ஸஹதேவா! என்ன! ஐந்து க்ராமங்களை யடைவதென்னும் வகையைக் கண்டு ஸந்தி செய்ய நினைக்கின்றாரா! ஆனல் உங்களரசர் இக்கணமேயாக ஸந்திக் கிணங்கி வழிபடுக.

பொடிப்பதோவிலை போரினிற் குருகுலத் தவரைக்
குடிப்பதோவிலை பின்னவன் மார்பிடைக் குருதி
அடிப்பதோவிலை ஸுயோதன னடித்தொடை கதையால்
முடிப்பதேயினிச் சந்திநும் முடியுடை யரசே.

த்ரௌ. (ஸந்தோஷத்துடன் தனக்குள்) நாதா! இம்மாதிரியான நமது வார்த்தையை நான் வெகுகாலம் கேட்கவில்லையே.

பீமன். அல்லது! என்ன! ... ஸந்தி செய்யவோ! ஸஹதேவா! உங்களரசர் ஸந்திக் கிணங்கட்டும். கோபங் கொண்டு போர்க்களத்தில் கௌரவர் நூற்றுவரையும் நான் பொடிப்பதில்லை. துச்சாஸன னென்பான் ஒருவன், அவனுரத்தைக் கீண்டு அதினின்று பெருகு முதிரத்தையும் நான் பருகுவதில்லை. கதையால் ஸுயோதனனது பருத்த துடையிணையையும் நான் துடிக்குமாறு அடிப்பது மில்லை. உங்களரசர் ஸந்திக்கிணங்கி வழிபடட்டும்.

ஸஹ. மஹாராஜர் சொல்லி அனுப்பியதைத் தாம் உணராது உரைக்கின்றீரே.

பீமன். யாருக்குச் சொல்லியனுப்பியது?

ஸஹ. ஸுயோதனனுக்கு.

பீமன். அறுதியிட்ட தென்ன?

ஸஹ. இந்த்ரப்ரஸ்தம், வ்ருகப்ரஸ்தம், ஜயந்தம், வாரணாவதம் இந்நான்கையும் தந்து, ஐந்தாவதாக • இன்னும் க்ராமம் ஏதேனும் ஒன்றைத் தந்திடுமாறு.

பீமன். இன்னு மொன்று எதுவோ?

ஸஹ. இவ்விதம் க்ராமங்கள் நான்கிற்கும் பெயர்குறித்து, ஐந்தாவதான க்ராமத்துக்குப் பெயர் சொல்லாமையால், உண்டியில் விஷம் கலந்தது, அரக்குமாளிகையில் அனலிட்டது, சூதாடினது முதலாய அபகாரங்களைச் செய்த விடங்களைக் குறித்தாரென்றே நினைக்கிறேன்.

பீமன். (கோபத்துடன்) இவ்வாறு செய்தா லென்செய்ததாகும்?

ஸஹ. இவ்வாறு செய்தால், பரதகுலத்துக்கோர் நாசகாலம் வருமென்று நமதையனுக்கு உள்ளூர பயமுள்ளதென்று உலகில் வெளியாகும். அன்றியும், எவ்வளவு தணிந்துபேசியும் குருகுலத்தரசன் இணங்காமல் மிடுக்காகவே யிருந்தான், என்று அறிவித்தது மாகும்.

பீமன். மூடா! ஈதென்ன அர்த்தமில்லாத வார்த்தை. என்று நாம் ஐவரும் நகர்நீங்கி நெடுங்கானமேகுங்கால், ஒருவாறாகக் குருகுலத்தினை யழித்திட அறுதியிட்டனமோ, அன்றே குருடன்குமாரன் நீதிக் கிணங்கானென்பது, வெளியாயிற்று. ஏன்! த்ருதராஷ்ட்ரனது குலத்தைக் குமைத்தொழித்தானென்று, இவ்வுலகில் பேச்சுப்படில், பெரும் வெட்கமாகுமே யென்று பயமோ? ஆம். சினம் மீறிப் பகைவரைக் குத்திக் குமைத்து அவர் குலத்தை யொழித்தால், உங்கட்கு வெட்கமே தானுண்டாகும். கட்டிய பெண்டிரைப் பெருத்ததோர் ஸபைநடுவே துகிலுரிந்து வேணியை விடுத்தால், வெட்கம் யாதுமிலது!

த்ரௌ. இவர்கள் வெட்கப்படுவதில்லை. தாம் மட்டும் மறவாதிருக்க வேண்டும்.

பீமன். ஸஹதேவா! பாஞ்சாலிதானெங்கே? நேரமாக்குவதேன்?

ஸஹ. ஐய! தாம் கோபம்மிகுந்து மெய்மறந்தமையால், அவள் அருகிலிருப்பதும் நமது நோக்கத்திற் படவில்லை.

பீமன். (ஆதாத்துட னோக்கி) தேவி! என் பெருமையைப் பெருக்கக் காட்டிக் கோபம் கொண்டமையால், அருகில் நிற்கும் நீயும்

கண்ணிற் படவில்லை. ஆதலால் என்மீது கோபமுண்டோ? வேண்டாம்.

த்ரௌ. நாதா! நாம் உதாசீனம் செய்தால், எனக்குக் கோபம் வரும்தான். நாமே கோபங்கொண்டிருந்தால், எனக்குக் கோபமும் வருமோ? வாராது.

பீமன். ஆனால், உனக்குண்டான இழிவெல்லாம் ஒழிந்ததென்றே திடமாக எண்ணு. (கையைப்பற்றி அருகிலமர்த்தி முகத்தை உற்று நோக்கி) இன்னமும் நீ ஏனோ ஒருவாறாக இருப்பது? ஹா! ஏதோ நடுங்கி ஒடுங்கினதாகவே எண்ணுகிறேன். காரணம் தானென்னவோ? சீக்கிரம் சொல்.

த்ரௌ. நாதா! தங்களருகிலும், நடுங்கி யொடுங்கக் காரணமுண்டோ?

பீமன். ஏனோ எனக்கு அறிவிக்கமாட்டாய்! பாஞ்சாலீ! எனக்குத் தெரியலாகாதா? (வேணியைப் பார்த்து) அன்றேல், ஸஹதேவா! அறிவிப்பதனால் ஆவதுதானென்? பாண்டுவின் புதல்வர், உயிர்த்திருந்து பக்கத்தேயும் நிற்குங்கால், பாஞ்சாலராஜனது புதல்வி, இவ்வளவாய் நிற்கின்றனளே!

த்ரௌ. புத்திமதி! நீதான் சொல். என் நாதனைத் தவிர்த்து, மற்றொருவர்க்கு என தவமானத்தா லுண்டோ மனவருத்தம்?

புத்தி. அம்மணி! உண்மையே. இதோ சொல்கின்றேன். வீரரே! எதற்கும் மேலானதோர் நடுக்கத்துக்கு இன்றைக்கோர் காரணம் எனதம்மைக் குண்டு.

பீமன். என்னா! இன்னும் மேலானதும் உண்டோ! புத்திமதி! சொல், சொல்.

ஈட்ட முறுபுகையா லிண்டழலில் வீழ்ந்துயிரை
வீட்டி யழிகின்ற விட்டில்போல் வெங்கோலால்
வாட்டுகுரு வம்சத்தை மாய்க்கவல வென்சினமாம்
காட்டழலில் வீழ்கின்ற கண்ணிலியு முள்ளானே.

புத்தி. ஐயனே! இன்றையதினம், எனதரசி காந்தாரியின் அடிவணங்கச் சென்றனள்.

பீமன். முறையே, முறையே. பெரியோரின் அடிவணங்கச்செல்வது முறையேதான்.

புத்தி. திரும்பிவரும்பொழுது தேவியை பானுமதி யென்பவள் கண்டாள்.

பீமன். (கோபத்துடன்) பகைவாது பெண்டிரா நோக்கியது? ஆனால் தேவி மனக்குன்றக் காரணமாய்த்தான் பேசில.

புத்தி. அவள் தேவியைக் கண்டதும், தன்னுடைய சேடியரைப் பார்த்துப் பொக்கெனச்சிரித்து, இடக்குடன் சொன்னாள்.

பீமன். ஆ! பார்த்தது போதாதென்று பேசவும் பேசினளா?

புத்தி. "என்னடி யாக்ஞஸேனி! ஐந்து கிராமங்கள்தான் கேட்டாய்விட்டதாமே. இன்னும் கூந்தலைக் கட்டி முடிக்கலாகாதா" என்றாள்.

பீமன். ஸஹதேவா! கேட்டனையா?

ஸஹ. இவ்வாறு அவள் சொல்வது உசிதமே. நமக்குத் தெரியாததா. அவள் துர்யோதனன் இல்லாளல்லவோ? அமிர்தக்கொடியும் விஷமரக்கூட்டத்திற் சேர்ந்து விஷக்கொடியே யாவதுபோல், பெண்கள் எத்திறத்தினராயினும், அவர்கள் மனம், ஆடவருடன் பழகப்பழக, அவ்வாறே ஆகின்றது.

பீமன். புத்திமதி! பின்னர் தேவி சொல்லியது யாதெனின்?

புத்தி. சேடிகள் இல்லாமற்போனால், என்னம்மையே பேசுவாள்.

பீமன். ஆனால் நீ சொன்னது தானென்ன?

புத்தி. பிறகு நான்தான் சொன்னேன். "அம்மா பானுமதி! உங்களுடைய கூந்தலெல்லாம் அவிழாதிருக்க, எங்களுடைய அரசியின் கூந்தல் முடியப்படுமோ" என்றேன்.

பீமன். (ஸந்தோஷத்துடன்) நன்றே! புத்திமதி! நன்னரே இயம்பினாய். நமதடியார்க்குசிதப்படியே உரைத்தாய். (ஆபரணங்களை அவட்குப் பரிசாக அளித்து) பாஞ்சாலராஜன் பெற்றெடுத்த பெருமாட்டியே! கேள். அதிவிரைவில்,

எஞ்சலி லாவலி கொண்டுசு ழற்றியி டிக்குமி ருங்கதையால்
வஞ்சஸு யோதன னூருபி ளந்தின் வாரியெ னப்பெருகும்
அஞ்சுதி ரப்புனல் தோய்ந்துபி வந்திடு மங்கைக ளாற்பெண்ணே
விஞ்சிய வுன்குழல் கட்டிமு டித்திட வீமனு முன்னானே.

த்ரௌ. நாதா! நமக்குக் கோபமுண்டாகும், இதுவோர் பெரிய காரியமா? இது நம்மால் செய்ய முடியாததா? ஆயினும் நம்முடைய இவ்வுறுதியை ஸஹோதரரெல்லாம் ஒப்புக் கொள்ளட்டும்.

ஸஹ. ஆமோதிக்கிறோம். ஆமோதிக்கிறோம் நாங்களெல்லோரும்.

(பேரிகைகளின் பெருங்கோஷம்)

பீமன். துங்கமாருதத்தாற் கடலலைகளிற் றோன்றிய பேரொலிதானோ பொங்கியகால மேகங்கள் தாக்கிப் பொடிபடு மிடிகொலோ புழுங்கித் தங்கியகுருக்ஷேத்ர மண்டபத்தைச் சக்குநியோவென் சிங்கநாதத்தின் பேரொலியையுந் தெழித்திட வடிப்பதார்முரசே.

(கஞ்சுகி ப்ரவேசித்து)

கஞ். ஸ்ரீமந் மஹாஸேநாபதே! (அனைவரும் கரம் குவித்துநிற்க)

பீமன். எங்கேயோ எம்பெருமான்?

கஞ். பாண்டவர்பக்கலில் நின்றருளின எம் பெருமானையிருக்கல், ஸுயோதனன் கட்டவாரம்பித்தான்.

பீமன். என்ன! கட்டுண்டாரோ! (அனைவரும் படபடப்புடன் நிற்க)

கஞ். இல்லை இல்லை. கட்டுவதைப் பண்ணத் துவக்கினான்.

பீமன். பின்னர் ஆண்டவன்தான் செய்ததென்ன?

கஞ். பிறகு, எம்பெருமான் ஆச்சர்யமான தான்விரிந்த விச்வரூபத்தின் தேஜஸ்ஸினால், மதியிழந்த குருகுலத்தவரை யொழித்து நமது விருத்தியை யமைத்தான். உன்னைச் சட்டெனக் காண விரும்பினான்.

பீமன். (பரிஹாஸத்துடன்) கெடுவான் ஸுயோதனன்! ஈசனையும் கட்ட விரும்பினானோ! (ஆகாசத்தைப் பார்த்து) பாபி! தன்னையும் மறந்தனையோ! குருகுலத்துக்கோர் அழுக்காய இழிகுணனே! இப்படியுமோ நீ நியதியை மீறுவது! நின்பால் பாண்டவர்தாம் சீறிடின், அது உன் நாசத்துக்கு நிமித்தமேதானாகும்.

ஸஹ. ஐய! இழிகுணன் ஸுயோதனன், உலகனைத்தையும் கடந்த உத்தமனை, ஈசனென்று லக்ஷணங் கண்டுகொண்டிலனே.

பீமன். ஸஹதேவா! மூடன்; துராத்மா. எப்படியறிவான்?

ஞானமூலாவிய மாமனயோகியர் நாடுறுஜோதியை நாரணனை
தீனதயாளுவை ஸ்ரீதரனாம்வஸு தேவகுமார திவாகரனை
ஊனமதாய்விழி போனவன்மாமக னோதியதீமையி னோருருவாய்
ஈனகுணாதம னானஸுயோதன னேதறிவானெம தீசனையே.

ஜயந்தர! நமதரசர் இனிச் செய்யப் புகுவதுதானென்ன?

கஞ். தானாய்ச்சென்றே, குமரன் கண்டறியலாம். (செல்லுதல்.)

கேண்மையாலெனை தாசுநீ தருகெனக் கேட்கவுமதியாம
லாண்மையாலவன் மறுத்தமை யெனக்குயி ரனையநீ ரறிமின்கள்
வாண்மையால்வரி வின்மையால் மேன்மையால் வலியுரைக்கலனுங்க
டோண்மையாலமர் தொலைத்தடல் வாகையும் சூடுவனினியம்மா.

பீமன். (கேட்டு, ஸந்தோஷத்துடன்) ஓங்கிப் பெருகி வளர்ந்திடுக. ஐயனது சினம் சீறிப் பேரழல்போல் பெருகுக! பெருகுக!!

த்ரௌ. நாதா! இதுவென்ன? போருக்கழைக்கும் நமது துந்துபி ஒவ்வொரு நொடியு மறையப்படுவதேன்?

பீமன். தேவி! வேறென்ன; வேள்வி நடக்கின்றது.

த்ரௌ. (ஆச்சர்யத்துடன்) வேள்வியாவதென்ன!

பீமன். போரெனும் வேள்விதான். அறிந்திலையோ?

நரபதிதீக்ஷித னுங்கள் நால்வேமும் ருத்விக்காம்
ஹரிவகைசொல் யோனீயே அரும்யாக பத்தினியுன்
பரிபவநீப் பதுபயனும் பசுவாவார் கௌரவர்கள்
புரவலரை யிவ்வேள்விக் கழைப்பதற்கிப் போர்முரசே.

ஸஹ. ஐய! இனி நாம் இறைவராணையை முன்னிட்டு நமதாணவத்துக்குத் தக்கவாறு செய்திடச் செல்வோம்.

பீமன். வத்ஸா! ஐயனது ஆணையைச் சிரமேற்கொண்டு நடக்க, இதோ நாம் ஸித்தமாயிருக்கின்றனம். பாஞ்சாலீ! குருகுலத்தைக் குமைத்தொழித்திட இதோ செல்கின்றோம்.

த்ரௌ. (கண்ணீரை யடக்கிக்கொண்டு) அரக்கருடன் போர்புரிய நிற்கும் ஹரியைப்போல், உங்களுக்கு மங்களமுண்டாகட்டும்.

பீமன். பெற்றோம் இவ்வாழ்த்தை.

த்ரௌ. நாதா! போரின்றி திரும்பிவந்து எனக்கோர் ஆறுதலீந்திடவேண்டும்.

பீமன். பாஞ்சாலத்துப் பூவேந்தன் பெற்றெடுத்த பெண்மணியே! இன்னும் வீணிலோர் ஆறுதலும் வேண்டுமோ? பெண்டிருக்கான அவமதியைக்கண்டு நீங்காதமீதார் வெட்கத்தினாற் குன்றிய முகத்தோனாய அருமோ நான், பாரிற் குருடன் குமாரரில்லா தொழிக்காமல், இனி நின் அளகலைக் காண்பதில்லை.

த்ரௌ. என்னுருயிரே! யாக்ஞஸேனிக்குண்டான ஓர் பரிபவத்தினால் தமதுள்ளத்தில் கோபம் கொதித்தெழுகின்றது. பகைவர் படையின்கண், ஊக்கம் மிகுந்து உறுதியாயிருக்க வேண்டுமென்று உற்றவர் உரைப்பதுண்டு.

பீமன். வீரன்குமாரியே! கேள். பகைவருடன் பொருதலிற் றேர்ந்த வீரராம் எம்மவரும். மத்தகஜங்கள் முட்டுதலாற் பெருகும் உதிரமெலாம் மேதினியிற் கலந்தாகும் சேற்றில் அழுந்திக் கிடக்கும் ரதங்களின் மீதேறித் தாவிச்சென்று, ஒப்புயர் வில்லாத் தம்பிரதாபத்தை வெளியிடும் பதாதியர் செல்ல, பேராறெனவே பெருகும் உதிரந்தன்னைப் பருகி ஊனையுண்டு மதித்து அமங்களமாகக் கூவும் நரிகளெழுப்பிய பேரரவத்தையே மங்களவாத்யமாகக் கொண்டு, கபந்தமெல்லாம் துள்ளி யெழுந்தாடும் கோஷத்தினூடே, உலகெலாம் நடுங்கச்செய்யுமாறு அலையுமொலியுமாகிநிற்கும் கடல்போன்ற போர்க்களத்தில், பயம் யாதுமிலாது வீரம்மிகுந்து போர் புரியும் பண்டிதர்காண், பாண்டுபுத்ரர்.

(அனைவரும் செல்லுதல்.)

# இரண்டாம் அங்கம்

## முதல் காட்சி

(பானுமதி, தனது ஸகி சேடிகளுடன் ப்ரவேசித்து)

பானு. ஒடுங்கியே பலநினைவா லுடல்பதறி யெழுந்திடநான்
கடுங்கனவொன் றதிகாலைக் கண்டேனென் தோழியிது
கொடுங்கண்ட மணுகிவருங் குறிப்பாகு மெனநினைந்து
நடுங்குகின்ற தென்மனந்தா னினிதற்கென் செய்வேனே.

ஸகி. ஸகி! மஹாராஜர் துர்யோதனரது பட்டமஹிஷியாயி தும், அல்பமான ஓர் கனவினால் நீ தைர்யமிழந்து ம கலங்கலாகுமா?

சேடி. தேவி! ஸுவதனை சொல்லியது ஸரி. தூக்கத்திற் கன காண்பது ஸஹஜந்தானே.

பானு. அடி! இது அவ்விதமானதல்லவே; நான் கண்ட கன பெரும் தீங்கை விளைவிக்குமென்றே எனக்குத் தோன் கிறது.

ஸகி. ஆனால் அதைத்தான் சொல்லலாகாதா; நாங்களும் அ அறிந்து, பிறகு தக்க பரிஹாரமோ, சாந்தியோ செய்யலா

சேடி. அம்மணீ! கண்ட கனவு கெட்டதானால், முடிவு நல்ல கவே யிருக்குமென்று சொல்வார்கள்; அசுபமான கன சுபத்தையே கொடுக்கலாம், சொல்லுங்கள்.

பானு. ஆனால் சொல்கிறேன்; கவனமாய்க் கேளுங்கள். (யோசித் ஐயோ, ஸகி! அதை நினைக்கவும், ஏதோ திகிலடைகி தென்மனம். அங்கமெல்லாம் பதறுகின்றது. வேண்டா வாருங்கள். இவ்வனத்தைச் சற்றுச் சுற்றிவந்து ஒருவா ஆறுதல் செய்துகொண்டு பிறகு சொல்கிறேன். (என நந்தவனத்தைச் சுற்றிவரச் செல்லுதல்)

(கஞ்சுகி ஒருபுறமாக ப்ரவேசித்து பானுமதியைக் கண்டு)

கஞ். ஆஹா! விஹங்கிகை உரைத்தது உண்மையே. வேந்தர் வெற்றியுண்டாகவேண்டி, இங்கு வ்ரதமொன்று ஆரம்பி வந்திருக்கிறாள் தேவி. ஸ்த்ரீயானாலும், குணவிசேஷத்தா

நீயே புருஷனுனைப் பூபதிக்கு மேலாவை. உன்னைக் கண்டபின், தான் சென்று அபிமன்யுவைக் கொன்ற ஜயத்ரதனையும் கர்ணன் முதலானோரையும் பெருமைப் படுத்தவேண்டுமாம். (துர்யோதனன் ப்ரவேசித்து, கஞ்சுகியறியாது, அவன் பின் நிற்க) பாலனவன், ஒடிந்தவில்லோன், தனித்துநின்றவன், அந்த அபிமன்யு, பருத்தவரநேகரால் சூழப்பட்டுக் கொலையுண்டதால், குருகுலப் பெருமானுர்க்குப் புகழ்தா னென்னவோ?

துர். மூடா! அவ்விதம் அவனைக்கொன்றதில் தோஷந்தானென்ன? சிகண்டியை முன்னிட்டுப் பலரும் பின்னே சென்று மூப்புடைய கங்கையின் குமரனைக் கொன்றனரே! பெரும் புகழே தான் படைத்தனர் பாண்டவர். அப்புகழேதான் நமக்கும் இதில் விளைந்திட்டது. அதிருக்கட்டும்; வினயந்தரா! என் னுணையைப் பெற்று முறைப்படி செல்லாது அதிகாலையில் வெளியிற் சென்ற பானுமதியைக் காண அலைந்திடுகின்ற தென்மனம்; அவளிருக்குமிடத்தைக் கண்டனையா?

கஞ். அதற்கென்றே இங்குவந்தேன். ஆஹா! இந்த நந்தவனத்தின் அழகுதா னென்சொல்வேன். அரசே! அதோ, மாலையில் மலரினுட்புகுந்த சிறு வண்டெலாம், காலையில் அரும்பெல்லாம் மலரவும் வெளியேவந்து, தேனை உண்ண எண்ணித் திரும்பவும் உள்ளே செல்கின்றன பாருங்கள்.

துர். (பார்த்து) வினயந்தரா! இதில் இன்னுமோர் அழகுமுண்டு. ஆதவகிரணங்கள்படவே அரும்பெல்லாம் அலர, மகரந்தப் புழுதியெழப் புரண்டமைபால், உடம்பெல்லாம் அழுக்கடைந்து நறுமணம்பூண்டு வெளிவருகின்றன பார், இணையாமோர் சிறு வண்டும் பேடையும். இவ்வண்ணமேதானிருப்பர், அரசனும் அரசியும் காலையிற் பள்ளியெழுந்து வருங்கால்.

கஞ். (தனக்குள்) போர்நினைவின்றி இன்னுமா அந்தப்புர எண்ணம்! (ப்ரகாசமாய்) அரசே! இதோ ஸுவதனை தாரிகை இருவருடன் பானுமதிதேவி வருகின்றனள்.

துர். வினயந்தரா! சீக்கிரம் சென்று, எனது போருக்குரிய தேரை ஸித்தப்படுத்து; தேவியைக்கண்டு விரைவில் வந்திடுவேன்.

(கஞ்சுகி செல்லுதல்.)

(பானுமதி ஸகி சேடிகளுடன் திரும்பிவருதல்)

ஸகி. ப்ரியஸகி! அக்கனவு நினைவு வந்ததா?

பானு. சொல்கிறேன் கேள். இன்றைக்கு ப்ரமதவனத்தில் நானிருக்கையில், தேவ உருவான கீரியொன்று என் கண்முன்னே நூறு பாம்பைக் கொன்றது.

ஸகி. (தனியாக) ஐயோ பாவம்! என்னகஷ்டம்!

பானு. ஐயோ! மறந்துபோய்விட்டதே. வாருங்கள்; சற்று உட்கார்ந்து நினைப்பு மூட்டிக்கொள்கிறேன். (என்று உட்கார, ஸகி உபசாரம்செய்தல்.)

துர். ஏதோ ரஹஸ்யம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இங்கேயே மறைந்துநின்று கேட்கலாம். (என்று ஓர் புறமாயிருக்க)

ஸகி. தேவி! வீண் தாபம் வேண்டாம். மேல்நடந்ததென்ன?

துர். என்ன! தாபமா! இவளுக்குத் தாபத்துக்குக் காரணம்தானென்னவோ! என்னிடம் ஒரு வார்த்தையும் சொல்லாது வந்தனளே. ஏதேனும் என்மீதில் கோபமா? பெண்ணே, பானுமதி! உன் கோபத்துக்கு நான் ஆளல்லவே! நான் புரிந்த குற்றந்தானென்ன? ஒருகால்

நீடுந் துயிலிடை நின்முக மாறியு நின்றனனோ
நாடுங் கனவிடை யெந்நங்கை பேரை நவின்றனனோ
ஊடுங் கருத்துனக் குற்றதென் னேயெங் கொளித்தனைநான்
தேடும் பிழையுமுண் டோவுன் திருப்பணி செய்கையிலே.

அல்லது, இனிய காதலனென்றே யெண்ணி, காதல் பெருமையால் ஏதேனும் பிழை கண்டு கோபம் கொண்டனளோ! ஆயினும், அவள் சொல்வதைக் கேட்போம்.

பானு. பிறகு, ஒப்புயர்வில்லாத் தேவ உருவான அந்நகுல அழகைக் கண்டு என் மனமிழந்தேன்.

துர். (கோபத்துடன்) என்ன! நகுலனா! ஒப்புயர்வில்லாத் தேவ உருவானவனா! அவனைக்கண்டு மனமிழந்தனையா! மாத்ரீ மகன்மீது காதல்கொண்ட இவளாலல்லவோ நாம் ஏமாற்றப்பட்டோம்! மூடா! துர்யோதனா! இவளை நினைந்து நினைந்து ஏமாந்தனையே. ஆஹா! இதற்கென்றன்றோ,

இவள் காலையிலெழுந்து தனியதோரிடத்தைத் தேடினது. மோஹத்தால் மதிமயங்கி, இக்கற்பிலியின் அந்தரங்க மறியாது நானும் இவளைத் தேடினேனே. ஐயோ! அருகிலிருக்குங்கால் அச்சம்தானென்ன! புறத்தே புறப்பட்டால் ஸாஹஸம்தானென்ன! நெறி தவறின பாவி! இதுவோ உன் வழியும் செயலும்!

ஸகி. மேல்நடந்ததென்ன?

பானு. பிறகு, நானிருந்த இடத்தைவிட்டு லதாமண்டபத்துட் சென்றேன். அந்தகுலச்ரேஷ்டனும் என்னைப் பின்தொடர்ந்தே அங்கு வந்தடைந்தான்.

துர். குடியை விட்டோடின இவளுக்கு வெட்கமேது நாணமேது! கட்டியகணவனைக் கட்டியணைத்துக் கண்டதோர் கனவையும், கொண்டதோர் காதலையும், எவரையழைத்து அந்தரங்கமாக உரைத்து மகிழ்ந்தாயோ, அவரையே இன்று அருகழைத்து, மாற்றவனை மருவிய பாவி! இதை உரைக்கவும் வெட்கந்தான் இல்லையோ!

ஸகி. மேல்நடந்ததென்ன?

பானு. பிறகு, அந்தத் துடுக்கான அழகிய பிள்ளை மிடுக்குடன் கரத்தை நீட்டி என் மேற்சேலையை யிழுத்தான்.

துர். மிடுக்குடன் கரத்தை நீட்டி மேற்சேலையை யிழுத்தானு! ஆஹா! கேட்டதெல்லாம் போதும். இன்னும் கேட்கவேண்டுமோ? பிறர் மனைவியைத்தழுவிய பாவி! மாத்ரீ மகனே! இத்துணை ஆணவமா உனக்கு? முதலில் உன்னுயிரை ஒழித்திடுவேன். (சிறிதுதூரம் சென்று) ஆயினும், அவனைக் கூறுவதிற் பயன் என்ன? நம்மவளையே முதலில் முடிக்கவேண்டும்.

ஸகி. தேவி! பிறகு நடந்ததுதானென்னவோ?

பானு. பிறகு, பெருமானுர்க்குத் துயிலுணர்த்தும் காலை மங்களவாத்யங்களையும், கணிகைமாதர் பாடிய இன்னிசைகளையும் கேட்டுத் துயிலெழுந்தேனடி! (என்று மூர்ச்சிக்க, ஸகியும் சேடியும் விசாரத்துடன் ஒருவரை யொருவர் பார்த்துநிற்க)

ர். (ஆக்ஷேபத்துடன்) என்ன! துயிலெழுந்தனளா! தான் கண்ட கனவைத் தோழிக்குச் சொல்லினளா! அந்தோ! வீணே விபரீதமாக நினைத்தேனே, நற்காலம்! நற்காலம்!

கோணுத வுன்வார்த்தை சிறிதேகேட்டுக் கோபத்தாற்
குதிக்காத ததுவுநன்றே
நாணும லுன்மாற்றம் கொண்டுபோவி நானெதிர்த்தொன்
றுரையாத ததுவுநன்றே
பேணுது மதியிழந்து பேதையேனுன் பெருமையறிந்
திடமுடிந்த பேறுநன்றே
வீணுகீ பழிபடைத்து மண்ணேநீத்து விண்ணேகா
வினையுமிக நன்றேயம்மா.

ஸகி. (சேடியைப் பார்த்து) ஐயோ! இக்கனவில் நன்மையேயில்லையே. ஆனாலும் முகத்துக்கினிப்பாய்ப் பொய்யைச் சொன்னால் தலைவிக்கோர் பிழை செய்தவளாவோம். கைப்பேயாயினும், ஹிதத்தை உரைப்பவரே உற்றவராவார்.

பானு. (சிறிது தெளிந்து) ஸஹவதனே! என்கனவில் நன்மை யென்ன? தீமையென்ன? சொல். கடைஜாமத்திற் கண்டேனே!

ஸகி. தேவி! எல்லாம் அசுபமே. பாம்பையாவது நகுலத்தை யாவது நூறுபாம்பைக் கொல்வதையாவது கனவிற் காண்ப துண்டென்று பெரியோர் சொல்லவில்லையே.

து ர். ஓஹோ! நகுலமா! கீரியா! அதுவா பாம்பைக் கொன்றது! ஆயினும் அதைப்பற்றி எனக்குச் சிந்தையில்லை. 'நூறு' என்னும் இவ்வெண், ஒருகால் உடன்பிறந்தாரைக் கூட்டி என்னைத்தான் குறிப்பிடுகின்றதா? (கர்வத்துடன்) ஆயினும், பேதையரைப் பதைக்கச் செய்யும் இவை, துர்யோதனனு மெனக்கும் ஓர் பொருட்டா? க்ரஹங்களின் சாரம், கனவு, சகுனம், உத்பாதம் இவைகள் உண்மையிற் பயன்படுவ தென்ன? காக்கையேறவும் பனம்பழம் விழுதல்போலவுந் தானே. அறிவுளோரும் இதைக்கண்டு அச்சமடைவரோ? நல்லது; பானுமதிக்குண்டான இவ்வீண் ஸந்தேஹத்தைத் தீர்க்கலாம்.

பாநு. ஸுவதனே! அதோ பார். உதயகிரியி னுச்சியினின்று ஒற்றையாழியந் தேரினைத் துரத்தி, ஒளியினைப் பெருக்கி, பகலுக்கோர் வேந்தனாய் எழுகின்றனன், ஆதவனும். இனி தாமதிக்கலாகாது. தரளிகே! இப்பொழுதே பூஜை புரிந்திடவேண்டும்; எண்ணிறந்த கரங்களுடைய பெருமானுக்கு அர்க்யம்விடப் பொற்கலத்தினை யெடுத்துவா.

சேடி. (சென்று, அர்க்யபாத்ரத்துடன் (திரும்பிவந்து) அம்மணீ! இதோ கொண்டுவந்தேன். ஆண்டவனைத் தொழுதெழலாம்.

துர். அரசியினருகிற் செல்ல, ஈதே நல்ல ஸமயம்.

(என்று அணுக)

ஸகி. (தனியாக) மஹாராஜா வந்துவிட்டனரே! பாபம்! அரசி செய்யும் நோன்பிற்குத் தடையும் ஏற்பட்டுவிட்டதே.

பாநு. (ஸூர்யனெதிரில் நின்று) எம்பெருமானே!

அந்தர மென்னு மாழ்கடல் முளைத்த
செந்தா மரையே! திகழ்குண திசையாம்
நலமிகு மங்கைதன் நன்னுதற் கணியும்
திலகமே! புவனித் திமிரம தோட்டும்
மாமணி விளக்கே! மண்ணவர் கண்ணே!
தாமரை மணாளா! ஜகத்தின் ஸாக்ஷீ!
தேடிக் காண வேண்டாத் தெய்வமே!
யீடில் கதிரா யிரங்கொளும் ஜோதீ!
கடையே னிரவினிற் கண்ட கனவோ
கொடியது போலும், குழம்புவ தென்மனம்,
எம்பெருமானே! யீரைம் பதின்மரும்
உம்பே ரருளா லோர்குறை வின்றி
வளம்பல பெருகி வாழ்ந்திட நீதிரு
வுளங்கொள வேண்டுவ னுனக் கிவ்

வருக்கிய நீர்யா னளிக்கின் றேனே. (என்று அர்க்யம் விட்டு) ஸுவதனே! புஷ்பம்தானெங்கே? சீக்கிரம் கொண்டுவா. (அரசன், சேடியரைக் குறிப்பாலகற்றித் தானே புஷ்பம்கொண்டுவர, அரசியின் கரம்படவே தழுதழுத்துப் புஷ்பத்தைத் தரையில்விட)

பாநு. (கோபத்துடன்) என்ன? சேடியர்க்குள்ள செருக்கா இது? (திரும்பி அரசனைப் பார்த்து) என்ன! ஆர்யபுத்ரரா!

துர். தேவி! நான் இவ்விதம் தொண்டுசெய்ய அறியாதவன். உன் உள்ளம் உவந்தபடி செய்யலாம். (பானுமதி வெட்கத்துடன் தலைகுனிந்து நிற்க) கண்ணே! காதலியே! காதல் நோக்கோடு, காதலனுமென்னைக் கண்ணெடுத்துப் பாராயோ! முறுவல் பூத்து மெல்லியதோர் மாற்றமும்தான் தாராயோ! தந்தொருக்கால் அருள்பொழியப் பாராயோ! இதோ அஞ்ஜலியு மளித்திட்டேன்.

பானு. அரசே! தமதாணையைக் கொண்டு எனக்கோர் நோன்பு நோக்க ஆசையுண்டு.

துர். கண்ணே! கனவின் கதை யெல்லாம் கேட்டறிந்தேன். போதும், போதும். மெல்லிய உன்மேனியை விணே வ்ரதத்தால் வருத்துவது வேண்டாம்.

பானு. கண்டகனவு தீயதென்றே கவலைப்படுகின்றதென்மனம். அருள்புரிந்து நான் கொண்ட நோன்பை முடிக்கவிடையளிக்கவேண்டும்.

துர். (கர்வத்துடன்) கவலையா! கண்ணே! சிறிதும் இனி அது வேண்டாம். பூமியிற் பொதிந்து வேரூன்றிக் கிளைகள் மிகுந்த பெரு மரத்தின் குடைநிழற்கீழ், தன்னினமெல்லாம் சுற்றுமிருக்க வீற்றிருக்கும் சிங்கத்தின்பால் அயர்ந்து உறங்கும் செல்வப் பேடையல்லவோ நீ. உனக்குமா மனக்கவலை?

பானு. அண்ணலே! தமதருகிலிருக்க எனக்கு மனக்கவலைக்கு இடமுண்டோ? ஆயினும் தமது மனோரதம் ஈடேறவேண்டுமென்றே கோருகிறேன்.

துர். ஸுந்தரீ! என் மனோரதமா!

இன்னமுதே யுன்னோ டிணைந்து கலந்துன்வாய்
மன்னமுத முண்ண மதித்தேன்யான்—என்னன்பின்
மாதே யெனக்கு மனோரதமு மீதேயிப்
போதே யருள்வாய் புரிந்து.

(திரைக்குள் பெருங்கோஷம் கிளம்ப அனைவரும் திகைத்து நிற்க)

பானு. (பயத்துடன் அரசனை யணைந்து) நாதா! நாதா!

துர். கண்ணே! கலங்காதே; பெருங்காற்றுக் கிளம்பியது. ஏன் பயம்? (ஸந்தோஷத்துடன்) இந்தக்காற்றும் எனக்கோர் உபகாரத்தையே செய்தது. இதனாலல்லவோ என் காதலி தான் செய்யவிருந்த நோன்பை யொழிக்கவும் என்னை யணைந்திடவும், என் எண்ணம் கைகூடவு மாயிற்று. காற்றே! நீயே எனக்குற்றவன். இனி நான் உவந்தபடி விளையாடலாம்.

(கஞ்சுகி பரபரப்புடன் ப்ரவேசித்து)

கஞ். அரசே! முறிந்தது! முறிந்தது!!

துர். என்ன?

கஞ். பீம—

துர். என்ன பிதற்றுகிறாய்?

கஞ். (பயத்துடன்) பீமமான காற்றெழ முறிந்தது, தமது தேரின் கொடிமரம். கிங்கிணிகளெல்லாம் பூமியில் வீழ்ந்தன.

துர். பெருங்காற்று எழவே தேரின்கொடி அறுந்தது; அதனாலென்ன? இதற்கு, 'முறிந்தது முறிந்தது' என்று அடித்துக் கொள்வானேன்?

கஞ். அரசே! ஒன்றுமில்லைதான். ஆனாலும், அபசகுனம்; அதை அரசர்க்கு அறிவித்து ஏதேனும் சாந்தி செய்யலாகுமே யென்று சொன்னேன்.

துர். (அலக்ஷ்யமாய்) போய் புரோஹிதர் ஸுமித்ரரிடம் சொல்.

கஞ் சித்தம். (செல்லுதல்.)

சேடி. அரசே! ஸிந்துமஹாராஜாவின் மாதா அதோ வருகின்றார்.

துர். (தனக்குள்) என்ன! ஜய்த்ரதனின் அன்னையா! அபிமன்யு கொலையுண்டதனால், பாண்டவர் ஏதேனும் அநர்த்தம் விளைவித்தனரா? (ஜயத்ரதனின் மாதா ப்ரவேசித்துக் கண்ணும் கண்ணீருமாய் நிற்க) அம்மே! ஏன்? ஆபத்துத்தானென்ன? எதிரிலாத் தேர்வலவன் ஜயத்ரதன் க்ஷேமம்தானே?

மாதா. ஐயோ! ஏது க்ஷேமம்!

துர். அதேன்?

மாதா. பிள்ளையைப் பறிகொடுத்துத் தவித்து நிற்கும் காண்டீபன் சபதம் செய்திருக்கிறானே, "இன்றைக்கு ஸூர்யாஸ்தமனத்துக்குள் அவனை நான் அழித்தொழிப்பேன்" என்று,

துர். (புன்சிரிப்புடன்) இதுதானு துக்கத்துக்குக் காரணம்! பிள்ளையைப் பறிகொடுத்துப் புலம்பிப் பிதற்றுகிறுன். அம்மே! என்ன பேதமை உமக்கு. இத்துர்யோதனனது கரங்களாகிய அரணுல் காக்கப்பட்டு நிற்கும் ஜயத்ரதனே அழித்தொழிக்க அத்தனஞ்ஜயனுக்கு முண்டோ திறல்?

மாதா. அப்பப்பா! அவன் நல்ல வீரன். அன்றியும் பாலனேப்பறி கொடுத்து, பொறுமை யிழந்து, பொருமை யெழுந்து, கோபம் கொதிக்க, மெய்ம்மறந்து திரிகின்றுனே!

துர். (பரிஹாஸத்துடன்) அப்படியா? பாண்டவர் சௌர்யத்தையும் பொருமையையும்தான் பார்த்ததில்லேயே! அன்று என் குறிப்பினே யுணர்ந்து, துச்சாஸனன் துள்ளியெழுந்து அப்பாஞ்சாலியைச் சுற்றிச்சுற்றித் துரத்தி, அவள் கூந்தலேயும் துகிலேயு மலேத்திட, அப்பெரும் ஸபையில், காண்டீப மேந்திய இவ்வீரனும் மற்றஸகோதரரும்தான் கண்டிலரோ? பொறுமை யிழந்து, பொருமை யெழுந்து, கோபம் கொதித்து, மெய்ம்மறந்தெழ, அதைக்காட்டிலும் தருணம் வேறுண்டோ?

மாதா. ஐயோ! தவறிடில், தற்கொலே செய்துகொள்வதாக சபதம் செய்திருக்கிறுனே.

துர். அப்படியா! ஆனுல் ஸந்தோஷிக்கவேண்டிய ஸமயம்; போதும் இனி இவ்வருத்தம். குருச்ரேஷ்டர்களாலும் க்ருப கர்ண த்ரோண அச்வத்தாமாதி வீரர்களாலும் காக்கப்பட்டுள்ள அம்மஹாவீரனே, ஸிந்துவின் மன்னனே, ஐவரி லெவர்தாம் அழிக்க வல்லவர்?

பானு. ஆயினும், கொடும் சபதம் செய்திருப்பதனுல் கொஞ்சம் பயப்படவேண்டியதுதான்.

துர். பானுமதீ! இதென்னபேதமை! எனக்குமா பாண்டவரிடம் பயம்? அவர்கள் பெருமைதான் தெரியாதோ! போதும். அம்மே! நீங்களெல்லோரும் செல்லுங்கள். நான் சென்று ஜயத்ரதனேக்காத்து, வீணில் வைராக்யம்கொண்டு இறுமாப் படைந்த பாண்டவனுக்கு, கொண்ட சபதம் வீணுனதுகண்டு, வெட்கமுற்று உடலம் விட்டு, உயிர் துறக்கும் வகை யறிவிப்பன்.

பாண்டவர்பே ராற்றலெலாம் பகர்துச்சா தனன்மார்பம்
கீண்டுதிரங் குடிப்பதினும் கிளருமவன் கதையாலென்
நீண்டதொடை பிளப்பதினும் நின்றஜயத் திரதனையும்
மாண்டழியச் செய்வதினும் மற்றின்று காண்போமே.

(அனைவரும் செல்லுதல்.)

---

# மூன்றும் அங்கம்

## முதல் காட்சி

(பெருங்கோஷத்தைக் கேட்டு அச்வத்தாமா உருவிய கத்தியும் கையுமாக வருதல்.)

அச்வ. ப்ரளயகாலத்துப் பேரிடியின் கர்ஜனைக்கோர் மாற்றொலியாக, புதிதாய் பரவிக்கிளம்பிய இப்பேரரவம் எங்கிருந்து எழும்பியது? (யோசித்து) ஐயமேயில்லை. பீமார்ஜுனரோ, ஸாத்யகியோ, வாலிபமதத்தினுல் நமதையனை வருத்துகையில், அவரே பெருஞ் சீற்றங்கொண்டு, தாம் பெற்ற பெருமைக்கிசையப் பகைவரைப் பொடிசெய்யுமாறு போர்புரிய எழுந்தனர்போலும். ஆதலின், இனி ரதத்தை எதிர்பார்த்துத் தாமதிக்கலாகாது; பொழியநிற்கும் சூல்கொண்ட மேகம் போன்ற இவ்வாளைக் கையிலேந்திப் போர்முனையுட்சென்று ஐயனை யணுகுவன். (சிறிதுதூரம் சென்று) ஆஹா! எனக்குமுண்டோ இது? அச்வத்தாமா நான். எனதையன் போர்புரியும் பெரும்விழாவை கண்ணாரக்கண்டு களிகூரச்செல்லுமெனக்கு அபசகுனங்கள் உண்டாகின்றனவே! அந்தோ! ஈதென்ன! சதுரங்க ஸைன்யங்களும், வில்வலவர்களான கர்ணன் முதலியோரும், போரைவிட்டுப் புறம்காட்டி யோடுகின்றனரே! கௌரவப் படையெனும் பெருங்கடலைக் காத்திடும் பர்வதங்காள்! கேண்மின். சண்டையைவிட்டுச் சென்றால் சாவுதானில்லையோ! ஜன்மமெடுத்தோர்க்கு மரண முண்டென்பதை மறந்தீரோ! ஏனோ இந்தச்சிறுமை! வேண்டாம் இந்த அச்சம். கர்ணனே! பதையாதே. மாதுலனே! களத்துக் கேகு. க்ருதவர்மனே! கம்பம் வேண்டாம். தனு

வின்றித் துணை யில்லாத் தொல்லோனுயு எந்தை போரின் பாரமெல்லாம் பொறுந்திருக்க பய மென்பதற்கும் இட முண்டோ?

(இரைக்குள்) இன்னுமுண்டோ உமதையன்.

அச்வ. (கேட்டு) புல்லியரே! என்ன சொன்னீர்? 'இன்னுமுண்டோ உமதையன்' என்றா? ஹாஹா! அண்டமெல்லாம் அழல் பெருகியழித்திட, ஆதித்தர் ஆறிரண்டவரும் எழுந்திலரே! வையமெல்லாம் வெருண்டு, எண்டிசையு மகன்று மாருத ரெழுவரும் எழுந்திலரே! புஷ்கலாவர்த்த முதலாய ஸப்த மேகங்களும் விண்ணின் தலமெல்லாம் தகைந்திலவே! ஏனே அப்பெரியோனுக்கு, சூரம் மிகு சான்றோனுக்குப் பழியையும் பகர்ந்தீர்!

(ஸூதன் பரப்பரப்புடன் ப்ரவேசித்து)

ஸூத. ரக்ஷித்தருள்வாய். குமரனே! ரக்ஷித்தருள்வாய்.

அச்வ. ஹா! ஐயனது ஸாரதி அச்வஸேனனோ! ஐயா! மூவுலகையும் காக்கவல்ல பெரியோனது ஸாரதியல்லவோ நீர்? ஏனோ நான் உம்மைக் காப்பது?

ஸூத. ஐயோ! அவரிருந்தால் எனக்கு மற்றோர் அடைக்கலமும் வேண்டுமோ!

அச்வ. ஆனால் ஐயன்தான் எங்குச் சென்றனரோ?

ஸூத. அந்தோ! நமது துர்ப்பாக்யம். இனி அவரை இவ்வுலகில் எங்கே காண்போம்! (என்று தலைகுனிந்து, கண்ணீருடன் நிற்க)

அச்வ. ஹா! பிதா! (என்று கீழேவீழ்ந்து மூர்ச்சித்து, ஒருவாறு தெளிந்து கண்ணீருடன்) ஐயனே! மும்மைசாலுலகுக்கும் முதல்வனான வில்லோனே! இனி உம்மைக் காண்பதுதா னெங்கேயோ! எந்தையே! எனக்கென்றோர் மாற்றமும்தான் தாராயோ! (ஸூதனைப் பார்த்து) ஐயா! அத்துணை புஜவலிமையும் அதிவீரமும் கொண்ட எந்தை எப்படித்தான் மாண்டனரோ, சொல்லும். ஆசிரியனுக்கென்று தக்ஷிணையாய்த் தந்தனனோ பீமன், தன் அரும்பெரும் கதையை.

ஸூத. ஐயோ பாவம்!

அச்வ. சிஷ்யர்களுள் ப்ரியசிஷ்யனாயிருக்கும் ஆசார்யனென்று நினையாது, அர்ஜுனனும் தகைந்தனனோ?

ஸூத. அப்படியும் நடக்குமோ?

அச்வ. ஆனால் கோவிந்தனே கோபங்கொண்டு அனல்வாய் நேமியின் கூரியவாய்க் கிலக்காக்கினனோ?

ஸூத. அதுவுமில்லை.

அச்வ. இவரன்றி என்னையனை எதிர்த்து நிற்பவருமுண்டோ?

ஸூத. குமரனே! உண்மைதான். உமதையன் சீறியெழுந்து நின்றிடில் எதிர்நிற்பவர் இம்மூவுலகிலுமில்லை. ஆனால், சோகமெழுந்து உள்ளமுருகிப் படை துறந்தபொழுதேயே, பகைவர் அவரைத் தகைந்தனர்.

அச்வ. சோகமெழுவதற்கும் படைதுறப்பதற்கும் காரணந்தான் என்னவோ?

ஸூத. ஆம். குமரனேதான் காரணம்.

அச்வ. என்ன! நானா?

ஸூத. (கண்ணீர் பெருக) பொய்மையிலாத புனிதன், ப்ருதையின் புதல்வன், முதலில், 'அச்வத்தாமா ஹத:' என்று அறைந்து, பின்பு பொறுத்து 'குஞ்சரம்' என்று சொன்னான். முதலிற் சொல்லிய, அத்

தீதிலா னுரைத்த மாற்றம் செவிப்படு மளவி னெஞ்சிற்
கோதிலா னெடுத்த வில்லும் கொடியவெங் கணையும் வீழ்த்திப்
போரில னிறந்தான் போலும் புதல்வனென் றினைத லின்றி
யேதிலான் போல நின்றான் யார்கணும் பந்த மில்லான்.

அச்வ. எந்தையே! எனக்கென்று வீணிலுயிர்துறந்த உத்தமனே! சௌர்யத்துக்கோர் நிதியே! சிஷ்யர்பால் அன்பு பூண்ட சீமானே! தருமனிடம் பக்ஷம்கொண்ட பெருமானே! நான் இறந்தேனெனக் கேட்டதும், வீணில் நீர் ப்ராணனை விடுத்தீரே! ஐயோ! உம்மையிழந்தும் உயிர் தரித்திருக்கின்றேனே, பாவி நான். இப்பாவியால் வீணன்றோ நீர் கொண்ட பேரன்பு.

வில்லாய் நீவெம் போர்முனை வெல்லும் விறலாய்நீ
சொல்லாய் நீதொல் வேதிய ருட்கும் தொழிலாய்நீ
வல்லார் வல்ல கலைக ளனைத்தும் வல்லானே
எல்லா மின்றே பொன்றின வுன்னோ டெந்தாயே. (மூர்ச்சித்தல்.)
(க்ருபாசார்யர் ப்ரவேசித்து)

க்ருப. பேரியலும் துணைவர்மிகப் பெற்றவேந்தும் பீடாரு
முதிட்டிரனும் பெரிதும்சூழ்ந்த
வீரியமார் வேந்தர்களும் யானும்போரில் மேவியிருந்
ததுவெல்லாம் வீணே யன்றோ
பாரியலும் பதுமைகளைப் போலவந்தோ பகைத்தலையிற்
றுகிலுரியப் பட்ட போது
காரிகைதன் பரிபவத்தைக் கண்டோமன்று கடும்போரிற்
றுரோணவதை கண்டோ மின்றே.

ஐயோ! குமரன் அச்வத்தாமன் இதோ இருக்கின்றான். தந்தையிறந்த செய்தியைக் கேட்டு, என்னதான் செய்ய விரும்புவனோ? அவனை யணுகுவன்.

அச்வ. (சிறிது தெளிந்து ஆகாசத்தை நோக்கி) ஹா! யுதிஷ்டிரா! யுதிஷ்டிரா! புவிதனிற்பிறந்த அந்நாள் துவக்கிப் பொய்யறியாப் புனிதனே! பாரின்மீது பகைபடையாப் புண்ணியனே! எந்தைக்கென்றோ இப்பெரும்பழி படைத்தனை. என்னையனை, ஆசிரியனை, வேதியர்க்கோர் வேந்தனை, வெல்லவகையும் கண்டனையே. உன் வாய்மையையும் பகையிலாப் பெருமையையும் எனக்கென் றகற்றினையோ!

ஸூத. குமரனே! இதோ உன் மாமன் சாரத்வதன்.

அச்வ. (க்ருபாசார்யரை நோக்கிக் கண்ணீருடன்)
உரையாடற் குறுதோழ னுறன்முறையான் மைத்துனனும்
நிரையாரும் விற்குருவுன் னீள்படையின் றனித்தலைவன்
விரையாத வீரர்க்கும் வீரன்றான் மேலோயித்
தரையாரு மறியாது தனித்தெங்கே சென்றனனோ.

க்ருப. குழந்தாய்! நீயுமிவ்வாறு துக்கத்தைப் பெருக்கலாகுமோ?

அச்வ. ஆனால், நான் துக்கத்தைத் துறந்தேன். புதல்வனிடம் பேரன்புகொண்ட பெற்றோன், நான் இறந்தேனெனக் கேட்டதும் பறந்தே பரலோகம் சென்றான். பாவிநான் பழி

படையாது என்பிதாவைப் பின்படர்வன். அவனையே பிரியாதிருப்பன்.

க்ருப. வத்ஸா! நீ எண்ணுவது உசிதமல்ல; பெற்றோனிறந்தபின், அவன் செல்வழிக்கு, புத்ரன் அவனைப் பாராட்டி, நீர்க்கடன் கழிக்கவேண்டிய விதி உனக்குத் தெரியாததா?

ஸூத. அப்படியேதானது; உன் மாதுலன் சொல்வதே உசிதம்.

அச்வ. ஐயா! உறுதியேதான் உணர்த்தினீர். ஆயினும் என்தந்தை இறந்தபின், அரைக்ஷணமேனும் இவ்வுயிரைத் தரித்திட வியலேன். அத்தந்தையைக்காண அவரேகின இடத்துக்கே செல்வேன். (காவாளை நோக்கி) போதும். இனி சஸ்த்ரத்தைக் கையிலேந்தி நிற்பதும் போதும்; என்தந்தை ஆயுதமகற்றி உயிரிழந்தபின்னும், உன்னை ஏன் நான் கையிலேந்தி நிற்பது? என் கைக்கோரணிகலமாய் இருந்ததும் போதும். வாளே! நீ ஸுகமே வாழ்க. (என்று வாளைவிட எத்தனிக்க) (திரைக்குள்) சீரிய பாரத்வாஜ மரபிற்கோர் திலகமான த்ரோணனுக்கும், இவ்வோர் அவமானம் நேரிட்டதே! இதையும் பொறுத்திருப்பதோ?

அச்வ. (கேட்டு) என்ன! பாரத்வாஜரின் மரபா! திலகமா! அவருக்குமோர் அவமானமா!

(திரைக்குள்) மும்மைசாலுலகுக்கும் முதல்வோனான வில்லோன், அயர்வெய்தி ஆயுதமகற்றி யிருக்கையில் முற்ற நரைத்த அப்பெரியோன் முடியின்மேலடித்து, த்ருபதனுடைய புல்லியபுதல்வன் விடுதிக் கேகின்றனனே; இப்பழியைப் பார்த்திருந்தும் பொறுத்திருப்பதோ வேந்தர்காள்?

அச்வ. (கேட்டு) என்ன! ஆயுதமகற்றி அயர்வெய்திப் படுத்திருந்த எனதோர் அருமைத்தந்தையின் பூத்தலர்ந்த காசம்போல் வெளுத்து நரைத்த முடியின்மேல் ஆயுதம்கொண்டும் அடித்தனனோ?

க்ருப. அவ்வாறுதான் சொல்கின்றனர்.

அச்வ. எனதையனது முடியை, அத்தீயோன் தொட்டனனோ?

ஸூத. என்னிறைவர்க்கு அந்தப் பரிபவமும் உண்டாயிற்று.

அச்வ. பாஞ்சாலகுலத்துக்கோர் அழுக்காய புல்லியனே! ஆயுதமகற்றிய புனிதனான என்தந்தையின் முடியை, பயமின்றித்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தீண்டிய பாதகா! பாண்டவரும் பாஞ்சாலருமாகப் பொங்கிப்பெருகும் படையைப் பஞ்சைப்போல் பறக்கடிக்கும் தீரன், அச்வத்தாமன் இருக்கிறுனென்பதையும் மறந்தாயோ? துராத்மா! என் கரம்கொண்டு உன்னுயிரை மாய்த்திடேன். இதோ, உன்பாழான தலையின்மேல் என் பாதத்தை வைத்தேயழிப்பன். ஹா! யுதிஷ்டிரா! பகைவரில்லாப் பெரியோனே! பொய்மையில்லா மெய்யோனே! உனக்கும் உன் தம்பியர்க்கும் என் தந்தை செய்த அபகாரம் தானென்னவோ? பீமா! அர்ஜுனு! ஸாத்யகீ! மாதவா! இது ஸரிதானே உங்கட்கும்! மூவுலகிலும் நிகரில்லா வில்லவன், வேதியன், வயதில் மூத்தோன், அனைவர்க்கு மாசிரியன், பின்னும் எனக்கோரினியதந்தை, அப்புனிதனது முடியை த்ருபதகுலத்துக் கோரழுக்காய புல்லியன் தொடுவது, தொடுங்கால் அனைவரும் கண்டு கூசாமல் வாளாவிருப்பதோ? ஹா! உங்களைக்குறை கூறுவதிற் பயனென்ன, பழியும் பாதகமும் படைத்த பாதகரே கேண்மின். பழியை அவன் செய்யுங்கால், கரம்தனிற் கொடியதோர் படையை ஏந்தி எவரெவர் நின்றனரோ, எவரெவர் பார்த்தனரோ, அவர் எவராயினும், அவரனைவரையும், இதோ என் அரும் பெரும் வாளுக்கிரையாக்கி ஊனும் உதிரமும் கலந்தே கொடுப்பன் பலியாகப் பெருந்திசை பத்துக்கும். (யோசித்து) ஹே பாண்டவர்காள்! மாத்ஸ்ய ஸோமக மாகதேயர்காள்! பேரழல் பொங்கியெரியும் அனல்வாய்க் கோடரியைக் கொண்ட ராமன், தன் தந்தைக்கென்று தரணியைத் தகைந்ததையும் அறியீரோ? அன்னுனையேபோல் வெங்களத்தில் வெகுண்டு வீரன் அச்வத்தாமா, பகைவரின் உதிரத்தைப் பெருக்கி ஆர்கலியாக்குவான் என்பதையும் மறந்தீரோ? இதோ வந்தேன்; வந்தேன். அச்வஸேனு! என் ரதத்தைக் கொண்டுவா. இக்ஷணமே செல்வேன்.

ஸூத. அப்படியே. (செல்லுதல்)

க்ருப. குமாரா! உன் தந்தையடைந்த பரிபவமெனும் பேரழலை அணைக்கவல்லார், உன்னையன்றியும் மற்றொருவருண்டோ? ஆயினும்,

அச்வ. இன்னுமுள்ளது தானென்னவோ ?

க்ருப. உன்னை ஸேனாதிபதி ஆக்கியபின், படையினுட் புகலாமே.

அச்வ. மாதுலா ! அது பரதந்த்ரமானது. பலனில் மிகச் சிறியது.

க்ருப. அல்ல ; பரதந்த்ரமுமல்ல ; பலனிற் சிறியதுமல்ல. நீ ஸேனாதிபதியாய் நிற்காவிடில், பீஷ்மத்ரோணரை யிழந்த கௌரவப்படையு நிற்குமோ ? வத்ஸா ! உனக்கு அப் பெரும் பதவியைத் தந்திடவே, ஆசையிருந்து நிற்பான் ஸுயோதனனென்றே நினைக்கிறேன்.

அச்வ. எனதையன் பட்ட பரிபவமெனும் பேரழலால் தீய்ந்த என்னிதயம், அவ்வழலை யணைக்க ஓர் தெள்ளியநீரில் மூழ்கு வதற்கு அவாவுற்றுளதே.

க்ருப. வத்ஸா ! வா, செல்வோம். ஸுயோதனன் இருக்குமிடத் தையே நாடிச்செல்வோம். (இருவரும் செல்லுதல்.)

---

# மூன்றாவது அங்கம்

## இரண்டாவது காட்சி

(துர்யோதனன் ப்ரவேசித்தல்.)

துர். தந்தைக்கென்று கடுமையான வ்ரதத்தை யேற்று, எங்கட் கென்று ராஜ்யத்தைத் தந்த பிதாமகனையும், வில்லாசிரிய ராகிய த்ரோணரையு மிழந்தேன். இனி இந்தப் போரின் பாரத்தை வஹித்து, ஸேனாதிபதியாய் நின்று போர்புரியத் தக்கவன் என்னுயிர்நண்பன் அங்கராஜனல்லது வேறொருவ ருண்டோ ?

கங்கைமக னிசிலை யின்குரு வென்பவர் காதிமலைந்தே கையற்று
ரிங்கினி யென்னுயிர் நண்பனை யல்லது வெல்லவ ரொருவு மிலரேயால்
அங்கர்பி ரானைவ ருதினி யின்பதி யாக்கியு மன்னன் றன்னொடும்
வெங்கள நேருறு வன்பொரு வன்சமர் வெற்றிகொள் வாகை புனை
[வேனே.

அதோ கர்ணனே வருகிறான். (கர்ணன் ப்ரவேசித்தல்.)
கர்ண ! என்னைப்போன்ற அத்ருஷ்ட ஹீனருமுண்டோ ?

விதுரரும் போர்செய்யக் கூடாதென்று, வில்லே முறித்து பலராமனுடன் தீர்த்தயாத்ரைக்கே சென்றனர். பீஷ்மரும் த்ரோணரும் வெங்களத்தைச் செங்களப்படுத்தி பாரில் வீழ்ந்தனர். என்னுருயிர்த்தோழா! தேவர்களுக்கும் அறுமுகன் அருளில்லாவிடில் அவர் வாழ்வும் பெருமையும் நிற்குமோ.

*சாயலாற் சிறந்ததோகைச் சாமளத் தடம்புள்ளூர்திச்*
*சேயலாற் றேவர்வாழ்வும் தேவருக்கி யாவரீந்தார்*
*நீயலாற் சமரிலென்னை நிலேயிடற் குரியாருண்டோ*
*தோயலாற் பயந்தகாதற் சூரனை யனையசூரா.*

நண்பா! இப்பெரும்போரில், இனி நீயே ஸேனைத்தலைவனாக இருந்து போரை முடிக்கவேண்டும். உன்னையல்லாது எனக்கு உற்ற துணையுமுண்டோ?

கர்ண. கௌரவேசா! இதுகாறும் உன் அன்னத்தையே உண்டு வாழ்ந்த நான், அச்செஞ்சோற்றுக்கடனை உன்பொருட்டுக் கழிக்காவிடில், இத்திண்டோள்கள் வளர்த்ததனுற் பயனுமுண்டோ?

*ஒருரு மொருகுலமு மில்லாவென்னை யுங்கள்குலத்*
*துள்ளோரி லொருவனுக்கித்*
*தேருரு மவர்மனைக்கே வளர்ந்தவென்னைச் செம்பொன்மணி*
*முடிசூட்டி யம்புராசி*
*நீருரும் புவிபாலர் பலரும்போற்ற நின்னினுஞ்சீர்*
*பெறவைத்தாய் நினக்கேயன்றி*
*எருரும் கதிர்முடியா யுற்றபோரில் யார்க்கினியென்*
*னுயிரளிப்ப தியம்புவாயே.*

துர். நண்பா! த்ரோணரின் முடிவைப் பார்த்தனையா! உற்றுரை இழந்த துக்கம் பெரிதேதான். அதினும், புத்ரசோகம் பொல்லாதாயினும், ஆன்றோனுகிய ஆசிரியர், தன்மகன் உயிரிழந்தானெனக் கேட்டதும் பேரழல்போல் எழாது, படையைவிடுத்துப் பகைவர் தகையுமாறும் நின்றனரே! உத்தம க்ஷத்ரியரும் அவ்வாறு நிற்பரோ? வேதியர் மரபில் தோன்றியதால், மனம் நொந்து, தீரம் இழந்து, இதயம குழைந்து பேதமை பூண்டனர்.

கர்ண. அரசே! அது அவ்வாறன்று.

துர். அன்றேல்,

கர்ண. அச்வத்தாமனையே, அவனிக்கோரதிபதியாய் முடிசூட்ட வேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்தவர், அவன் இறந்தானெனக்கேட்டதும், அந்தணனாகிய தனக்கு ஏன் அவ்வாயுததாரணம் என்று வெறியோடிச் செய்தனர். இதற்கென்றே, இப்பெரும்போரில், நமது ஸேனையிலுள்ள போர் வீரர்களது அழிவையும் மதித்திலர்.

துர். ஹா! அப்படியா!

கர்ண. வாலிபமுதல், அவர் உள்ளத்தை யறிந்த த்ருபதனும், தனது தேசத்தில், தங்க நிழலேனும் அவருக்குத் தந்தனனா?

துர். கர்ண! உண்மையேதான் உரைத்தாய்.

கர்ண. என்னொருவனது துணிவல்ல இது. ஆன்றோரனைவருமே இதை வேறாக எண்ணுவதில்லை.

துர். ஆம். ஐயமேயில்லை; இல்லையேல், ஸிந்துராஜனுக்கு நாம் அபயமளித்திருந்தும், அர்ஜுனன் அவனை அழித்திடுங்கால், வாளா விருப்பவனோ, அவ்வரியபெரிய வில்வலவன்?

(க்ருபாசார்யரும் அச்வத்தாமாவும் ப்ரவேசித்தல்.)

க்ருப. (அச்வத்தாமாவை நோக்கி) வத்ஸா! இதோவிருக்கின்றான் துர்யோதனன். ஸூதபுத்ரனுடன்கூடி ஆலின்குடைநிழற்கீழ் அமர்ந்திருக்கின்றான். வா, அவனை யணுகுவோம். (அரசனை யணுகி) கௌரவேசனே! மங்களம்.

துர். என்ன! க்ருபாசார்யரா! அச்வத்தாமாவுமா! ஆசார்யா! அடிபணிந்தேன். ஆசார்யபுத்ரா! வா. என்பொருட்டன்றோ போரில் தந்தையையுமிழந்தனை நீ.

கரிமுகக் கடவுளன்ன கம்பரித் தாமாவென்னும்
குரைகழற் றனைத்தாட்சிங்கக் குருளையே யுன்றன்தாதை
யருமறைக் கயனையொப்பா னடற்சிலைக் கரனையொப்பான்
திருவருட் கரியையொப்பான் திருத்தகு வீடுசேர்ந்தான்.

துக்கஸாகரத்தில் மூழ்கிக்கிடக்கும், நம்மிருவர்க்கும் பேதம் தானென்ன? உன்னையீன்றவன் என்னையீன்ற அம்மானுக்கோர் நண்பன். வித்தையில் நம்மிருவர்க்குமோர் ஆசிரியன்.

அவ்வுத்தமனும் உயிர்துறந்தனனே. இயம்பவும் வேண்டுமோ இத்துக்கம்.

கர்ண. த்ரோணகுமாரா! விசனமெனும் வெந்தழலில், நீயும் வீழ்ந்திடலாகுமோ.

க்ருப. வத்ஸா! குருபதியும், அங்கராஜனும், உள்ளவாறேதான் உணர்த்தினர்.

அச்வ. அரசே! என்னிடத்தில் அன்பு பூண்டு, என் துக்கத்தை எளிதாக்குவது உசிதமேதான். ஆயினும், நான் உயிரோடிருக்கவும், என்னைப்பெற்றவன் குடல்குலைந்து நிற்கலாயிற்றே.

கர்ண. த்ரோணகுமாரா! இக்கதியிற் செய்வதுதானென்ன? வந்தோர் பரிபவத்தினின்று பாதுகாக்க வல்லவராயிருந்தும், சஸ்த்ரத்தையெல்லாம்விட்டு, சோகமுற்று, தானே இவ்வவஸ்தைக் குள்ளாயினரே.

அச்வ. அங்கராஜா! இக்கதியிற் செய்வதுதான் என்னவென்று சொல்கிறீர்? செய்யக் கூடியதைக் கேளும். எவரெவர் படைபூண்டு புஜவலிமிகுந்து மதங்கொண்டு பாண்டவர் படையில் உளரோ, எவரெவர் பாஞ்சாலன் புன்மரபிற் கருவாய்க் கிடந்தனரோ, குழவியா யிருந்தனரோ, குமரராய்த் திரிந்தனரோ, எவரெவர் பழிதனைப் பார்த்தனரோ, எவரெவர் எனதெதிர் படுவரோ, அவரவர் படைவலியெல்லாம் பட்டிடச்செய்வன். அங்கராஜா! பண்டொருநாள், பரசுராமன் பகைவரைப் பிளந்து பெருக்கிய ரக்தம் பெருங்கடலாகத் தங்கிய ஸ்தலம் இதுவேதான். அன்னவன் தந்தையாம் அந்தணன் அடைந்தனனே அவமானம், அவ்வண்ணமேதான் என்னையனும் அடைந்தனன். அவ்வந்தணகுமரன் படைத்த பெரும் படைபோன்றதுதான் இக்காத்திலேந்தி நிற்கும் வாளும். அவ்வேதியன் மைந்தன் செய்தனனே, அதையேதான் சீறியெழுந்து செய்வன் த்ரோணனின் சிறுவனும்.

துர். ஆசார்யபுத்ரா! உன் வீரத்துக்கும் சூரத்துக்கும் நிகர்தானுண்டோ.

க்ருப. அரசே! அவனுக்குப் படையும் வீரருமளித்திடில், உலகம் மூன்றினையும், முடித்திடுவானென்பது திண்ணம். ஆதலின்

விதியில் வழுவாது, படைக்கோர் முதல்வனாக, இவனுக்கு அபிஷேகம் செய்திடு.

துர். ஏற்றதுதான்; ஆயினும், அங்கராஜனுக்கு அவ்வாறு செய்வதாக வாக்களித்தாயிற்றே.

க்ருப. ராஜா! துக்கஸாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் குமாரனை, அங்கராஜனுக்கென்று, உபேக்ஷை செய்வது உசிதமல்ல.

அச்வ. இன்னும் உசிதானுசித விசாரமோ! ராஜன்! இன்றிரவேனும் அயர்ந்துறங்கிப் பாணரெலாம் துதிபாட நாளைப் பள்ளியெழலாம். இனிப் பாரில் போரென்னும் பேருமிராது.

அவனிதனக் கதிபதியே யறைவன் கேளா
யருச்சுனனுக் கடலாழி யவனே யன்றிச்
சிவன்வந்து தேர்விடினும் கொல்வே னந்தத்
தேர்நின்ற திருவனையும் செங்கோல் வேந்தே
பவனன்சேய் முதலான துணைவ ரோரோர்
பகழிமுனை தனக்காற்றார் பரவை யாடைப்
புவனங்க ளனைத்தையுநின் குடைக்கீ ழாக்கிப்
புரிதிறல்வா கையுநினக்கே புனைவிப் பேனே.

கர்ண. (சிரித்து) அச்வத்தாமா! சொல்வதெளிது, செய்வதரிது. ஆயினும், நீ சொல்லியவாறு செய்ய வல்லவர், கௌரவப் படையில் இன்னும் அநேகருளர்.

அச்வ. அங்கராஜா! வாஸ்தவமேதானது. நான் துக்கம்பெருகி நெஞ்சம் நொந்து சொல்லியதன்றிச் செருக்கினால் சூரரைச் சிறுமைப் படுத்துவதற்கல்ல.

கர்ண. ஆஹா! துக்கம் கொண்டவர்க்குக் கண்ணீர்தானுண்டு. வீரம் கொண்டவர்க்கோ, ஆயுதமேதான். அதைவிட்டு இவ்வாறு மதியிழந்து பிதற்றுவதோ?

அச்வ. என்ன சொல்லினை? அச்வத்தாமனும் எனக்கும், அழுகையால் துக்கம் நீங்கும், என்று சொல்லினை? சஸ்த்ரத்தினால், என்று சொல்லலாகாதோ! அடே! பரியைத் துரத்தும் பேதையே! பரித்தேரோட்டும் பாகன்மகனே! உன் ஜாதிக்குரிய புத்தியேதானிது.

கர்ண. ஆடே! ஸூதனாயினென்ன, ஸூதபுத்ரனாயினும் என்ன? உயர்குலத்திற் பிறப்பது தெய்வ யத்னம். ஆனால், பௌருஷமடைவதோ, என்னுடைய யத்னம்.

தேரோட்டி யோவவன்றன் சேயோவென் பதைமதியேன்
சீரோட்டா மரபுதித்தல் தெய்வத்தின் வசமன்றோ
பேரோட்டு மாண்மையினைப் பெருமுயற்சி யாற்படைத்துத்
தாரோட்டு மென்குலத்தின் றலைமையையான் வகிப்பேனே.

அச்வ. உண்மையே. பௌருஷமடைவது உன் யத்னம்! ஆதலினாற்றான், போர்க்களத்தைவிட்டுப் புறங்காட்டி ஓடிவந்தனையோ? பேதையே! நீ படை படைத்தாலென்ன; ஆயுதம்கொண்டு நின்றாலென்ன? ஆசார்யன் சாபத்தால் உன்படை வலியிழந்துளது என்பதை மறந்தாயோ.

கர்ண. ஆடே! வீரமே உருவாய் வந்த வில்லோனே!

நான்பிடித்த படையாசா னவின்றதொரு சாபத்தால்
தான்படைத்த பெருஞ்சக்தி தனையிழக்கு மாயினுமவ்
வூன்படைத்த போரிடையே உந்தையைப்போற் படைதுறந்து
வான்படைத்த புகழிழந்து மதிமயங்கி நின்றனனோ.

ஆடே! வீரியமுளதோ இலதோ அறியேன் என்படைக்கு. ஆயினும், உன் தந்தையைப்போல் பரிபவமடைந்தேனா! படையை யகற்றிய வீரரும் போரிற் பெருஞ்சூர ரெதிர்க்குங்கால், அவரை யடர்த்திட ஆயுதமடைபவரேயன்றி, மானமிழந்த மங்கையரைப்போல், அருமுடிவீழ்ந்திடக் கிடப்பரோ!

அச்வ. அடே! ஆயுதமறியா இழிஞனே! பேதையோ, பேடியோ, பெருவீரனோ என்தந்தை; இப்புவனமூன்றும் உரைக்கும் அவன் வலிமையை. இன்னும், பொய்யறியாப் புனிதன் யுதிஷ்டிரனே சொல்வன், என்னையன் படைதுறந்த பாங்கை. ஆயினுமென்? துக்கத்தினாலோ, பயத்தினாலோ, மற்றும்தானெதனாலோ, என் தந்தை த்ருபதகுமாரனுடைய கையைத் தடுக்கவில்லை. அடே! ஆணவம் மிகுந்த பாணர் புழுவே! இதோ, உனது தலையில் எனது இடதுகாலை வைக்கிறேன். தடு பார்ப்போம். (என்று எழ)

துர். செல்வனே! வேண்டாம் வேண்டாம். (என்று தடுத்திடவும் அச்வத்தாமன் காலைத் தூக்க)

கர்ண. (குதித்தெழுந்து கோபத்துடன் வாளை ஏந்தி) அடே! ப்ராம்மணப் புலையனே! ஜாதியிற் சிறந்தவனுதலின் உன்னைச் சிதைத்திட லாகாது; ஆதலின், இதோ நீ கர்வம்கொண்டு தூக்கிய காலை வெட்டி வீழ்த்திடுவேன்.

அச்வ. அடே மூடா! ஜாதியிற் சிறந்தவனுதலால் சிதைக்க இயல வில்லையோ? இதோ இறந்தேன் என் ஜாதியை இத்துடன். (என்று பூணூலை யறுத்துக் கீழே போட்டு) இப்பொழுது படை பூண்டு என்னுடன் போர்புரியலாம்; இல்லையேல், முடிமேல் கையிணையைக் குவித்திடு.

(இருவரும் வாளை ஏந்தி நிற்க)

துர். ஆசார்யபுத்ரா! வேண்டாம், வேண்டாம். (என்று தடுத்து நிற்க)

க்ருப. அங்கராஜா! வேண்டாம், வேண்டாம். (என்று தடுத்து நிற்க)

அச்வ. அரசே! விட்டிடுக, விட்டிடுக. எந்தையை யிகழ்ந்த இப் பாபியின் வாழ்வு, இன்றுடன் முடியட்டும். இவனுற் பயனு மென்ன? மதியின் மரபிலுதித்த நுமக்கு இப்பாகன் புதல் வனோ, மேதினியில் நண்பன். குணக்குன்ருய கோவிற்கு இப்பாவியுமாவனோ அன்பன். இக்ஷணமே இப்புல்லியனை, திஷ்டத்துய்மன்பால் பக்ஷபாதம் கொண்ட த்ரோஹியை விண்ணுலகேற்றுவன்.

கர்ண. அடே! பிதற்றும் பேதையே! இனி நீ உயிருடனிருப்ப தில்லை. ஆன்ருேனே! விட்டிடுக, விட்டிடுக. என்னைத் தடுத்து இவனைக் காப்பதும் ஆகாது. மதியீனனென்று இவனை விட்டிடேன்; இக்ஷணமே இவன் உயிர்கொள்வன்.

துர். ஆஹா! ஏனோ இன்று உங்களிருவர்க்கும் இந்த க்ரோதம்?

க்ருப. ஸேனையிற் பெரியோரிருவர், இவ்வாறு வெகுண்டு நிற்ற லாகுமோ? வத்ஸா! அச்வத்தாமா! எண்ணிய கர்மத்தை விட்டு, வேறென்றில் படபடப்பும் கொள்ளலாகுமோ? ஈதென்ன மயக்கம்!

அச்வ. மாதுலா! இறைவர்க்கோரினிய நண்பன், ஸேனைத்தலைவன் இவன் வலியெல்லாம் வெளியாகும், பீமனும் விஜயனும் தகைந்திடுங்கால். இதோ, என் எதிர்நிற்கும் இப்பாபி

போர்க்களத்தில் உயிரிழக்கும் வரையில், நான் என் வில்லை யும் வேண்டேன், வாளையும் தீண்டேன்.

(என்று வாளைக் கீழே எறிய)

கர்ண. (சிரித்து) உன் குலத்திற்கு உரியதேதான், வாளை விடுவதும். இப்பொழுதே பிதாவுக்கு இனிய மைந்தனாயினை.

அச்வ. அடே மூடா! ஆயுதத்தை அகற்றுவிடினும், அகற்றியதே தான் அது, உன்போல்வார்க்கு. ஏன்? அது இருந்தும் பயனின்மையால்.

கர்ண. ஆஹா! என்கையிற் கரவாளமிருக்க, மற்றவர் கைப்படை களால் ஆவதுதானென்ன? இவ்வாளால் ஆகாதது, மற் றொன்றினாலாகுமோ?

பீமன். (திரைக்குள் துச்சாஸனனைப் பற்றியிழுத்துக் கீழே தள்ளியவாறே) ஹா! துராத்மா! த்ரௌபதியின் துகிலுரித்துக் குழல் கலைத்த பாவி! பொட்டையன் பெற்ற புழுவே! இந்நாளும் அணுகிலையே நீ என்னெதிர்; இன்று நீ போவதுந்தா னெங்கேயோ? அஹோ! ராதேய துர்யோதன ஸௌபலர் காள்! பாண்டவரைப் பகைத்து வில்லேந்திய வீரர்காள்! மானத்தையே பெரும் தனமாய் மதித்தோர்காள்! கேண் மின். கேண்மின் நீவிரெல்லீரும். எவன் பாஞ்சாலன் பெற் றெடுத்த பெண்மணியின் குழலைக் கலைத்தனனோ, எவன் அரசரொடு ஆசிரியர் அமர்ந்த அவைக்களத்தில் அவள் துகிலை அலைத்தனனோ, எவனது மார்பத்தைக் கீண்டு பெருகும் உதிரத்தைப் பருகுவேனென்று நான் அன்று அறைந்தனனோ, அன்னான் இதோ சிக்கினன், என் கரங்க ளிடை. இனி அவனைக் காக்கும் கௌரவன்தான் யாவன்?

(அனைவரும் திகைத்து நிற்க)

அச்வ. (சிரித்து) அங்கர்கோனே! த்ரோணனைப் பழித்தவனே! ஜாமதக்னியின் சிஷ்யனே! ஸேனாதிபதியே! புஜவலி கொண்டு புவனியைக்காக்கும் புண்ணியனே! எப்படி! 'என் கையிற் கரவாளமிருக்க மற்றவர் கைப்படைகளால் ஆவ தென்ன' என்றனையே. உன் கைவாளால் ஆவதைப் பார்க்க லாம். இதுதான் ஸமயம். துச்சாஸனனை பீமனிடமிருந்து விடுவிப்பாயோ?

கர்ண. நானிருக்கும்பொழுது, துச்சாஸனனுடைய நிழலேயும் ஒரு வர் நாடமுடியுமோ? இளவரசே! வேண்டாம் பயம்; இதோ வந்தேன். (என்றேகுதல்.)

அச்வ. அரசே! பீமனேயாவது, விஜயனேயாவது, தடுக்க இந்த ராதேயனுலு முடியுமோ? தாமே சென்று பின்னவன் விபத்தைப் போக்கிடவேண்டும்.

துர். படையேந்தி நான் நிற்க, எவ்விழிஞனுல் என்னவாகும்? என்னிளம் செல்வமே! இதோ வந்தேன். (என்றேகுதல்.)

அச்வ. அந்தோ! துச்சாஸனனது உதிரத்தைப் பீமன் பருகிட்டனனே! இதைப்பார்க்க வியலேன். மாதுலா! மாதுலா!

பொய்யனே யாவேனப் பொய்யு மெனக்கினிதே
நையும் நரனெனக்கு நன்றேகாண் நானெறிந்த
வெய்ய படையெங்கே வீழ்ந்த தைைமயீதோ
கையிலே கொண்டவனேக் காக்கநான் செல்வேனே.

மாதுலா! எனது வாளெங்கே, வாளெங்கே? (என்று வாளே எடுக்க விரும்ப)

(ஆகாசத்தில் அசரீரி) மெய்யை மறந்து மாறு செய்யவும் தகுமோ மைந்தா நீ?

க்ருப. மைந்தா! கேட்டனேயா, அசரீரிவாக்கை?

அச்வ. ஐயோ! அசரீரியும் எனக்கு ப்ரதிகூலமாய் விட்டதே! விண்ணவரும் பாண்டவர்க்கே நண்பராயினரோ! மாதுலா! பாழும் ராதேயன்பாற் பெருகிய கோபத்தினுல் என்ன இழி தொழில் புரிந்துவிட்டேன்! ஐயோ! என் க்ரியைகளேயு மிழக்கலாயிற்றே! இனி தாமேனும் அரசன்பால் நின்று உதவி புரியவேண்டும்.

க்ருப. வத்ஸா! இதோ செல்கிறேன். வா, போகலாம். (இருவரும் செல்லுதல்.)

---

# நான்காவது அங்கம்

## முதல் காட்சி

---

(அர்ஜுனனது பாணத்தினால் சிதைந்த தேரைவிட்டிழிந்து கர்ணன் உருக்குலைந்து திகைத்து நிற்றல்.)

கர்ண. ஐயா! தேருமழுந்தியது. திறலும் தொலைந்தது. இந்நாளாய் அன்புடன் வளர்த்துவந்த நாகத்தை அஸ்த்ரமாகவிடுத்து அர்ஜுனனது உயிர்கொள்ளலாம் என்று கொண்டிருந்த எண்ணமும் வீணாயிற்று. குற்றுயிருடன் திரும்பிவந்து, அந்நாகம், இன்னுமோர்முறை தன்னை அஸ்த்ரமாக விடுக்குமாறு இறைஞ்சிக்கேட்டும், நான் மறுத்ததினால், எனக்கு ஸாரதியாய்நின்ற சல்யராஜனும் மனம் நொந்து, "என்னாலு மினி இந்தத் தடந்தேர் விரைந்தூர்தல், மற்றுன்னாலு மினிந்த விஜயன்றன் னுயிர்கொள்ளுமாறு" என்று, தேரைவிட்டு இழிந்தேகினன். ஆம்; ஈதெல்லாம், முன்னொருநாள் நல்லாசிரியன் சினம்மிகுந்து சபித்ததின் பலனே; தருணத்தில் திகைத்து நிற்கலானேன். மாதாவை முனிந்த மன்னவன் மாற்றமும் மாசுறுமோ? ஈசனே உருவாகி, ப்ருகு குலத்திற் கோர் விளக்கா யவதரித்த அன்னான் அருளிழந்து அறைந்ததின் பயனே இது; இதனைத் தப்ப வியலாது. ஆயினும், வீணே பெரியோனை நோவதிற் பயனென்ன. பார்ப்பனர்க் கல்லாது, வேறெவர்க்கும் வில்வித்தை கற்பிப்பதில்லை யென்று ப்ரதிக்ஞை செய்திருந்த அம்மஹானை யேமாற்றி, பார்ப்பனன் என்று சொல்லி வித்தைகளைப் பயின்றேன். என் வஞ்சகத்தையறிந்த அம்மஹானும் அதிர்ந்து சபித்தனர். ஐயனே! அடிபணிந்தேன். ஆண்டு என் குற்றத்தைப் பொறுத்தருளாயா?

பரசுடை ராமாவுன்றன் பாதபங் கயங்கள்போற்றி
வரிசிலை வேதம்தன்னில் வல்லவித் தகனேபோற்றி
பரமமா ஞானயோகப் பதியினின் றவனேபோற்றி
இருபதம் தன்னில்வீழ்ந்தே னிறைவனே போற்றிபோற்றி.

(சற்று நிதானித்து) ஹா ஹா! கர்ணனுக்குமா போர்முனையில் மனக்கலக்கம்! தேரழிந்தாலென்ன, ஸாரதியில்லாக்கா லென்ன? விற்குனிக்கும் வகையையும் கணைதொடுக்கும் கணக்கையும் மறப்பனோ; போரிற் பயமடைவனோ?

மலைகலங்கினும் மாதிரங் கலங்கினும் மாதிரங் களில்விண்ணோர்
நிலைகலங்கினும் நெடுங்கடல் கலங்கினும் நிலங்கலங் கினும்சேடன்
றலைகலங்கினும் பேரவை மூன்றினும் தளர்விலா தார்கற்ற
கலைகலங்கினும் போர்முகத் தென்மனங் கலங்குமோ கலங்காதே.

(ஸ்ரீகிருஷ்ணன் வேதிய உருவத்துடன் ப்ரவேசித்து)

வேதி. இரந்தவர்க்கு இல்லையென் றுரையாத இறைவனே! இதோ உன்னை வந்தடைந்தேன், வயது முதிர்ந்தவன். இயைந்த தொன்றை, இக்ஷணம் அளித்தல் வேண்டும்.

கர்ண. ப்ராம்மணோத்தமா! சர்ணாம்ருதமான, தமது திருவாக்கைக் கேட்டுப் பேரின்பத்தை யடைந்தேன். ஆயினும், அந்தோ! பாவிநான் நாட்டிலிருந்து, இரப்போர்க்கு வேண்டியதைத் தந்து, அவர்கள் மனம் களிக்கச் செய்யும் தருணத்தில் இல்லையே. இப்போர்க்களத்தில் தனஞ்ஜயன் பாணத்தினால் உருக்குலைந்து அங்கமெலாம் உதிரம்பெருகக் கிடக்கின் றேனே. இதுகாறும், 'இல்லை' என்றுரையாத நான் என் செய்வேன்? ஸ்வாமீ! தாமே அன்புகூர்ந்து நான் தரத்தகு பொருளைக்கேட்டருளவேண்டும். தந்திடுவேன் தந்திடுவேன்.

வேதி. அங்கராஜா! உனது பேரீகையைக் கேட்டு, மேருவினிடை யிருந்த நான் ஓடோடியும் வந்தேன். என்செய்வது? எனது துர்ப்பாக்யம். ஆயினும், உன்னால் கொடுக்கக்கூடியது ஒன்றைத் தந்தால் பெற்றுச் செல்கிறேன்.

கர்ண. ஐயோ! இச்சமயத்தில் என்னிடம் கொடுக்கக்கூடியதும் உண்டோ? என் உடன்பிறந்ததாகப் பலராலும் சொல்லப் பட்ட அந்தக் கவசகுண்டலங்களையும் அன்றே அளித்து விட்டேன். த்விஜோத்தமா! தாமே க்ருபைகூர்ந்து என் னிடம் உளதாயதொன்றைக் கேட்டருளவேண்டும். அதைத் தடையின்றி தந்திடுவேன்; நானும் கடைத்தேறுவேன்.

வேதி. இம்மையில் ஸுகமேயிருக்கக் கொடுத்துவைக்காத பாவி நான். என் தரித்ரம் என்னை நிழல்போலேதான் சுற்றும்.

என்செய்வது? ஆயினும், உயர்குலத்திற் பிறந்த நான் ஆன்ரோர் அருளிச் செய்தவண்ணம் மறுமைக்கேனும் வழி தேடிக்கொள்கிறேன். அங்கர்கோனே! உன்னிடமுள்ளதைத் தந்திடுவாயா?

கர்ண. வேதியரே! வேதக்கொழுந்தே! திரும்பவும் இவ்விதம் கூறலாகுமா? என்னைச் சோதிக்கவுமாகுமா? த்ரிகரணசுத்தியாய்த் தந்தே தீர்வன். கேட்டருளவேண்டும். ஸ்வாமீ! ஏனோ தயங்கவேண்டும்? என்னை க்ருதார்த்தனாகச் செய்ய மனமில்லையா? பஞ்சபூதங்களறியச் சொல்கிறேன். தந்தேன், தந்தேன். சொல்லியருளவேண்டும்.

வேதி. என்செய்வது? உள்ளதைக்கொண்டு த்ருப்தியடையவேண்டியதுதான். ராஜா! உண்மையாகக் கொடுப்பாயா?

கர்ண. ஐயோ! இன்னுமா அவ்வார்த்தை? ஸ்வாமீ! இவ்வகிலபுவனங்களையும் ஆக்கி அளித்து அழிப்பவனெவனோ, உண்டுமிழ்ந்தெடுப்பவனெவனோ, திருமார்பில் லக்ஷ்மியை தரித்தவனெவனோ, அவன் ஸாக்ஷியாய்த் தந்தே தீர்வன்.

வேதி. ஆனால், இதுகாறும் நீ செய்துள்ள புண்யத்தின் பலனை எனக்குத் தந்திட்டால், அதுவே போதும்.

கர்ண. தந்திட்டேன், தந்திட்டேன். ஐயனே! என்னுடலம் சரிந்து ஆவியோ யெழுகின்றது. இத்தருணத்தில் இப்பேருதவி புரிந்த தமக்கு என்ன கைம்மாறு செய்வேன்? இதோ தந்திட்டேன் தானமாகத் தாம் கோறியதை; பெற்றிடுக. இதனினும் பெருமை புண்யம்தான் வேறென்ன?

ஆவியோ நிலையிற் கலங்கியதி யாக்கை யகத்ததோ
புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும் பக்குவந்
தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்து முதவினேன்
கொள்கநீ யுனக்குப்
பூவில்வா ழயனு நிகால னென்றாற் புண்ணிய
மிதனினும் பெரிதோ.

வேதி. வரையாஈகைப் பெரும் வள்ளலே! மெச்சினேன் உனது உதாரகுணத்தை. ஆனந்தம் கொண்டேன். ஆயினும், எவ்

விதமான தானந்தையும் தண்ணீருடன் தாரைவார்த்துத் தருதல்வேண்டும். அன்றேல், அளிப்பவர் அடையுமவர், இருவர்க்கும் பேறில்லை.

கர்ண. (சிரித்து) முன்னொருகால் மஹாபலிசக்ரவர்த்தியிடம் ஈரொரு பிறப்பின் ஒருபிரமகுறளாய் மூவடிமண்கேட்டருளிய வேதியச் சிறுவனுடைய தேஜஸ்ஸைக் கேட்டுள்ளேன்; கண்ணாரக் கண்டதில்லை. அந்த தேஜஸ்ஸுடனேயே விளங்கும் தூய மூர்த்தியே! தாம் கூறுவதும் நிஜமே; தண்ணீருடன் தாரை வார்த்துத் தந்தாலல்லது, தானம் நிறைவுறுதென்பது திண்ணம். ஆயினும், இவ்வமர்க்களத்தில் நீரும் கிடைக்குமோ! என் செய்வேன்? (சற்று யோசித்து) பெருத்த மரம்போன்ற இவ்வுடலுக்கு நீராயுள்ளது உதிரமாதலின், இதோ என் உடலத்திற் பட்டுள்ள இக்கணையை வலித்து அதினின்று பெருகும் உதிரத்தையே தண்ணீராகக்கொண்டு தானத்தை பூர்த்திசெய்திடுவேன். இறுதிக் காலத்திலும் இரந்தவர்க்கு இல்லையென்னாது ஈந்து இன்பமுறலானேன். நான் பெற்ற பாக்யமே பாக்யம். ஐயனே! இதோ தாரை வார்த்துக் கொடுத்து தானத்தைப் பூர்த்திசெய்கிறேன், இவ்வம்பின்வா யம்பினால். (என்று கணையை வலித்து ரக்தத்தையே நீராகக் கொண்டு தாரை வார்க்க)

வேதி. (பெற்றுக்கொண்டு) வேண்டிய வேண்டியாங்கு அளிப்போன் உன்னையன்றி வேறொருவர் இம்மூவுலகிலுமில்லை. உவந்து கேட்பதை உடனுதவும் அண்ணலே! அடங்கா இன்ப மடைந்தேன். உனக்கு வேண்டியதைக் கேள்; அநுக்ரஹம் செய்து செல்வேன்.

கர்ண. பெருமானே! இப்பிறவியில் எண்ணிறந்த பாபங்கள் செய் துள்ளேன். அவ்வினைப்பயனால், இன்னும் எனக்கு ஜன் மம் எத்தனை, எத்தனை ஜன்மமோ அறியேன். ஐயனே! யான் கோறுவது ஒன்றேதான்.எப்பிறவியிலும் எக்காலத் தும் எவர்க்கும் அவரவர் வேண்டியதை இல்லையென்று மறுக்காத சித்தவிருத்தி எனக்கிருத்தல் வேண்டும். ஈதன்றி வேறொன்றும் வேண்டேன்.

வேதி. வேந்தே! அவ்விதமே அநுக்ரஹித்தேன். இம்மட்டோ? இரந்தோர்க்கு 'இல்லை' என்றுரையாத சித்தமிருந்தும் செல்வமில்லாவிடிற் பயனில்லை. ஆதலால், எப்பிறவியிலும் எக்காலத்தும் ஈகையும் செல்வமும் குன்றாது குறையாது இம்மையில் இன்பமுற்று, மறுமையில் நீ முக்தியையும் அடைவாய். ப்ராம்மணவாக்கு பொய்க்காது. மைந்தா! மனப் பூர்த்தியாக அநுக்ரஹித்தேன்.

(மறைந்து பஞ்சாயுதத்துடன் விஷ்ணுரூபியாய் தரிசனம் தந்திட)

கர்ண. பெருமானே! பேரருளாளா!

சரணகோகனகங் கற்பகம்நாறத் தண்டுழாய் முடிபரிமளிக்கச்
சங்குநேமியும்வெண் ணிலாவெயிலெறிக்கத் தமனிய வுடைபளபளக்க
மரகதமேனி எழில்பழுத்தொழுக மகரகுண் டலம்புயத்தலம்ப [வேன்.
வனஜலோசனங்கள் அருண்மழைபொழிய வந்தநின் கோலநான்மற

சங்கொடு கதையும் நேமியும் சார்ங்கமும் தரித்த தேவசிங்கமே! விஜயன் வெங்கணையால் வெவ்வுயிர் துறக்குங்கால் கண்டேன், நின் இன்னுருவை; பெற்றேன் பேரின்பம். இந்த்ராதி தேவர்கள் மலரொடு தளிரும் கொண்டு போற்றும் புனிதனே! அருமையாம் யாகங்கள் செய்தும் கங்கை முதலான புண்யதீர்த்தமாடியும் பஞ்சேந்த்ரியங்களை யடக்கி இயம நியம ப்ராணாயாம முதலாய அஷ்டாங்க யோகங்கள் செய்தும், போகங்களை யடக்கி அரும்பெரும் தவங்கள் செய்தும் பெறுதற்கரிய பெரும் பயனை, நின் திருவருளால் இம்மையிலே பெறப்பெற்றேனே.

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாயலங்கற் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினு லழிந்து வீழ்ந்து
முணர்வுடனின் திருநாம முரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னை யன்றி
யிருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற் றாரே.

விஷ். கர்ணா! கடவுளுதனை அன்றுனது கவசமும் குண்டலமும் வாங்க அழைத்தேனும், குந்தியைக்கொண்டு அரவவாளி

ஓர்முறையே தொடும்வரம் கொள்வித்தேனும், தக்ஷகன்தன் மகவான உரகவாளி, தனஞ்ஜயனைச் சதியாமற் சாய்வித்தேனும், உற்பவத்தின் உண்மை யுனக்கு உணர்வித்தேனும் யானே. இன்று, மெய்க்கருணையால் நின் கர்மபலனையும் ஏற்றேன். (அந்தர்த்யானமாதல்.)

கர்ண. சங்கையி லாவகை யமபட ராலுயிர் தளர்பொழு தத்தருகே
மங்கையர் சூழவி ருந்தழு துள்ளம யக்கினும் யான்மறவேன்
கங்கையு நான்மறை யுந்துள வுங்கமழ் கழலிணை யுந்திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கொடு நேமியு மஞ்ஜன மேனியுமே.

(க்ருஷ்ணன் அர்ஜுனனுடன் ப்ரவேசித்தல்.)

க்ருஷ். அர்ஜுனா! பார்; ஸூர்யன் அஸ்தமிக்கும் ஸமயமாயிற்று. கர்ணன் உயிர்கொள்ளுமாறு பாணப்ரயோகம் செய்.

அர். க்ருஷ்ணா! இது வென்ன ஆச்சர்யம்! இந்த அங்கராஜனைப் பார்க்கவே, அவனிடத்து ஓர்வித பக்தியும் அன்புமுண்டாகின்றது. உற்றுப்பார்க்குங்கால் இவன் யுதிஷ்டிரன்போல் விளங்குகிறான். என்ன தேஜஸ்ஸு! என்னையுமறியாது ஓர்வித ஸகோதர வாத்ஸல்யம் உண்டாகின்றதே! க்ருஷ்ணா! இவன்பேரில் பாணம் தொடுப்பதற்கு மனம் வரவில்லையே!

க்ருஷ். அர்ஜுனா! ஈதென்ன மயக்கம். இன்னமும் நீ இம்மாதிரி உரைக்கத்தகுமா? முதனாட்போரில் பீஷ்மத்ரோணரைக் கண்டதும், புத்தி மயங்கி நீ பிதற்றியதுபோல் இன்றும் ஆரம்பித்தனையா? வேண்டாம். அன்றே உண்மை யுரைத்தேன். இனி என் ஆணையைச் சிரமேற்கொண்டு, பகலோன் மேல்பாற் பவ்வத்திற் படுவதன்முன், கர்ணனைப் படுத்திடு.

அர். உன் திருவுள்ளம் அவ்வாறானால், உன்னருளையேகொண்டு இதோ விடுத்தேன் பாணத்தை. (என்று பாணத்தை விடவும் கர்ணன் வீழ்தல்.)

(திரைக்குள்)

மூந்தி யெதிர்பொரும் விஜயன் தொடுத்த கோலால் முடி சாய்ந்து இன்று ஐவர்க்குமுன்னோன் வீழ்ந்தான்; அந்தி படுவதன்முன் ஆனிபோம்.

குந்தி. (தலைவிரிகோலமாய் யுத்தபூமியை யடைந்து கர்ணன்மீது வீழ்ந்து) ஹா! வத்ஸா! கர்ணா! பிறந்த அந்நாள்தொட்டுச் சீராட்டிப்

பாராட்ட பாக்யம் பெரு உன் தாயடா! இதோ வந்தேன். பிள்ளையைப் பறிகொடுத்து பெரும்பழியைப் பெற்றேனடா! கண்மணீ! இதற்கென்றே, அன்று உனக்கு நான் உண்மை உணர்த்தினேன். பாவிநான் பின் வருவது அறியாது பிதற்றினேனே! கர்ணா! கர்ணா! இதோ உன் தாயடா! வாய் திறந்து ஓர் வார்த்தை சொல்லமாட்டாதா! ஆவிபோகுமுன் அம்மாவென்று என்னை யழைக்கலாகாதா! கண்மணீ! புலம்பி நிற்கின்றேனே.

என்றேயென் தாதையுழைக் கன்னி மாடத்
தெழிலிரவி திருவருளா லீன்றே னின்ற
அன்றேபொற் பெட்டகத்திற் கங்கை யாற்றி
லாமுறையா லுனைவிடுத்தே னருளி லாதேன்
வென்றேமண் கவர்தருமன் மதலைக் காவி
மித்திரனா னதுகேட்டுன் வீரங் கேட்டு
நன்றேயென் றவப்பயனென் றன்னி வாழ்ந்தேன்
நாகமுநீ யரசாள நடக்கின் றாயோ.

அன்றொருநாள், பெரியோன், மாமுனிவன் துர்வாஸ மஹரிஷி, நான் செய்த சிச்ருஷைக்கு உவந்து எனக்கென்று உபதேசித்த மந்த்ரங்களின் மஹிமையை அறியாது, அந்த மந்த்ரத்தின் திறமறிய நாடினேன் நான் ஸூர்யபகவானை; அப்பகவானும் வந்துதித்து, ஈந்தனனடா உன்னை. கன்னிமாடத்து உதித்தமையால் உலகப்பழிக்கு அஞ்சி, பெற்ற பெருமையறியாது, உன்னிடத்து ஆசையோர் பக்கமும் உலகத்தினிடத்து அச்சமோர் பக்கமும் என்னை வருத்த, உலகத்திற்கு பயந்தே உன்னை ஓர் பொற்பெட்டிதன்னுள் வைத்து, கங்கையே உனக்கு அன்னையென்று, அவளிடம் உன்னை ஒப்புவித்துப் புலம்பித் தவித்தேனடா! கண்மணீ! நீயும் பிறந்த வளமறியாது, ஒளிந்து வளர்ந்து பாகனேயாய்ப் பலபொழுதும் போக்கினையே! ஐயோ பாபம்! தந்தைதாய் அறியாச்சிறுவன், என்று பல உன்னை ஏசவுமாயிற்றே! ஆயினும், உன் பிறப்பு மஹிமையால் அங்கராஜனெனும் உயர்ந்த பதவியைப்பெற்று உலகில் நிகரில்லா வீரமும் த்யாகமும்கொண்டு பெரும் புகழும் பெற்றாய். மைந்தா! கண்ணன் உரைத்தபிறகே, உண்மையுணர்ந்து, நீ என்

செல்வச்சிறுவனென்றே ஓடோடியும் வந்தேனே! இதற்கோ நீ தந்த ஆடையையும் உடுத்தி, உன்னைப்பெற்ற அன்னை நானேயென்பதை உனக்குத் தெளிவித்து மகிழ்வித்தேன். உன்னை புத்ரனென்று அறிந்தபிறகும், உன்னிடம் அவர்கட்குள்ள பகையை நீக்கும் வழிதேடாது பழிபடைத்த அன்னையானேன். என் செல்வமே! உன் ஆவிபதறி அடங்குங்கால் வெங்களத்தையடைந்து புலம்பித் தவிக்கிறேனே! ஏனோ உன் வார்த்தைக்கிணங்கி உண்மையை முன்பே வெளியிடாது இக்கதிக்குள்ளானேன்! ஐயோ! தெய்வச்செயலைத் தடுக்கவியலுமோ! விதிவழி மதி; இல்லையேல்,

ஓரஞ்சு பேருளரால் அறந்த வாத
யுதிஷ்டிரனு தியருரகக் கொடியோ னுதி
ஈரஞ்சு பதின்மருளர் தப்பி யார்க
ளிங்கிதங்க ளறிந்தடைவே யேவல் செய்யப்
பாரஞ்சு மொருகுடைக்கீழ் நீயே யாளும்
பதம்பெறும் விதிவலியாற் பயன்பெ றுமற்
காரஞ்சு கரதலத்தா யந்தோ வந்தோ
கடவுளர்தம் மாயையினாற் கழிவுற் றாயே.

---

# அங்கம் 5

## முதல் காட்சி

(த்ரௌபதியும் தர்மபுத்ரரும் வீற்றிருக்க, கஞ்சுகியும் புத்திமதியும் ஓர்புறமாய் நிற்க)

த்ரௌ. ஆர்யபுத்ரா! 'எம்மவரில் எவருடன் வேண்டுமானாலும் தனித்துநின்று நீ யுத்தம் செய்யலாம்' என்று, ஏனோ அந்த துராத்மா கௌரவேசனிடம், தமது தம்பி உரைத்தனரோ? ஒருகால், மாத்ரீ குமாரரில் ஒருவரை, வேண்டுமென்று அவன் அழைத்திருப்பானாகில், பெரும் துக்கத்துக்கு இடமுண்டாயிருக்குமே!

தர்ம. க்ருஷ்ணே! பீமன் அவ்வாறு உரைத்ததற்குக் காரணம் அறியாது பேசுகின்றனையே? ஸுயோதனனுடைய அக்ஷௌஹிணி பதினொன்றில் அனைவரும்போக மிகுந்தவர், க்ருபாசார்யர், க்ருதவர்மா, அச்வத்தாமா என்னும் இம்மூவரே. உற்றார்

உறன்முறையா அனைவரையு மிழந்தனன். தனனுடல மொன்றையே உடையவன். அதுவேதான் அவன் பெருமையில் தங்கியுள்ளது. இப்பொழுது அவன் ஒருகால், ஆயுதத்தை யகற்றி நெடுங்கானமேகி தவம்புரியச் செல்வான்; அன்றேல், பெற்றோனைக்கொண்டு நம்மிடம் ஸந்திமுடிக்க வேண்டுவான். இப்படியாகுமானால், பகைவரை அறவே முடிபடாது, என்ற நமது சொல் தவறிவிடுமென்றே பீமன் அவ்வாறு உரைத்தனன். அதனாலென்? பாண்டவரைவரில் எவருடனாவதுபோர் புரிய ஈடாவனோ, அந்த ஸுயோதனன்? என்னென்றாலும், நீடித்த பகையால், அவன் நமது பீமனுடனேயே கதை கொண்டு போர்புரிவானென்றே நினைக்கிறேன். (யோசித்து) கதாயுத்தத்தில் ஸுயோதனனுக்குப் பழக்கம் மிகுதியே யாயினும் சூழ்ச்சியும் யுக்தியும் குறைவு. ஆதலால் நமது பீமனே ஜயம்கொண்டு, ஸகல மங்களத்துடனும் திரும்பி வருவானென்றே நினைக்கிறேன்.

(திரைக்குள்)

விடாய் கொண்டேன்; தாகவிடாய் கொண்டேன். எவரேனும் நீரும் நிழலும் தந்து தீர்த்திடாரோ என் வேட்கையை?

தர்ம. (கேட்டு) ஜயந்தரா! இதுவென்ன? அறிந்துவா.

கஞ்சு. அப்படியே. (வெளியிற் சென்று திரும்பிவந்து) ஐயனே! அதிதி யொருவர் பசியுடன் வந்திருக்கிறார்.

தர்ம. உடனே அழைத்துவா. (கஞ்சுகி சென்று, முனிவடிவம் கொண்ட சார்வாகனென்னும் அரக்கனுடன் ப்ரவேசிக்க)

சார். (தனக்குள்) ஸுயோதனனிடமுள்ள நண்பினால் இவர்களை ஏமாற்ற, நமது அரக்க ரூபத்தை யொழித்து இவ்வாறு வந்தோமே; கண்டுகொள்வாரோ? ஆயினும் பார்க்கலாம். சார்வாகனும் ஏமாறுவனோ? (ப்ரகாசமாய்) தாகவிடாய் கொண்டேன். யாரேனும் நீரும் நிழலும் தந்து என் விடாய் தீராரோ?

தர்ம. முனிபுங்கவா! ஆசீர்வதிக்கவேண்டும். (நமஸ்கரித்தல்.)

சார். இத்தருணம் வீணான உபசாரங்களுக்கு உரியதல்லவே! தீர்த்தத்தைத் தந்து என் தாகத்தைத் தீர்க்கலாகாதா?

தர்ம. இதோ ஆஸனம்; வீற்றிருக்கலாம். ஜயந்த்ரா! சீக்கிரம் தீர்த்தம் கொண்டுவா.

சார். தாமும் ஆஸனத்தின்மீது அமரலாம்.

(கஞ்சுகி தீர்த்தம் கொண்டுவர)

தர்ம. முனீந்த்ரா! தாகவிடாயைத் தீர்க்கலாம்.

சார். (கால்கழுவி, யோசித்து) நீர் க்ஷத்ரியரென்று எண்ணுகிறேன்.

தர்ம. குறிப்பறிந்தே, உணர்த்தினீர்.

சார். ஐயா! தாங்கள் போர்புரிந்து உறவினரைக் கொல்பவர்; ஆதலின், தங்கள்பால் நீர்கொளலொண்ணாது. (யோசித்து) ஆனாலுமென்ன? இதோ இங்கிழலிற் சற்றமர்ந்து ச்ரம பரிஹாரம் செய்துகொள்கிறேன்.

த்ரௌ. புத்திமதீ! மஹரிஷிக்கு ஆலவட்டம் கொண்டு வீசு.

சார். எம்போல்வாரை இவ்வாறு உபசரிப்பது அனுசிதம்.

தர்ம. மஹரிஷே! தாம் இவ்விதம் களைப்படைந்தது எப்படியோ?

சார். முனிவர்க்கு இயல்பான குதூஹலத்துடன், பாண்டவரும் கௌரவரும் புரியும் பெரும்போரைப் பார்த்து இந்த ஸமந்த பஞ்சகத்தில் திரிவதுண்டு. இன்று இக்கோடையின் கடும் வெயில் வருத்தவே, அர்ஜுனனுக்கும் ஸுயோதனனுக்கும் நடந்துகொண்டேயிருக்கும் அக்கதாயுத்தத்தை முழுவதும் பாராமலே வரலாயிற்று.

கஞ்சு. அப்படியல்லவே! பீமனுக்கும் ஸுயோதனனுக்குமல்லவோ கதாயுத்தம்?

சார். நடந்ததறியாது என்னை ஆக்ஷேபிக்கிறாயா?

தர்ம. மஹரிஷே! அர்ஜுனனுக்கும் ஸுயோதனனுக்கும் நடந்தது தானென்ன?

சார். சற்று இளைப்பாறி உமக்கே சொல்வேன் அனைத்தையும்; இக்கிழவனுக்குச் சொல்லேன். முன்னமே சொன்னேனே, துவக்கியது கதைப்போரென்று.

தர்ம. பீமனுக்கும் ஸுயோதனனுக்குமென்று சொல்லவில்லையே!

சார். அது நடந்தாய்விட்டது. (தர்மரும் த்ரௌபதியும் மூர்ச்சையடைய, கஞ்சுகியும் சேடியும் ஆற்றுதல்.)

தர்ம. (சிறிது தெளிந்து) முனீந்த்ரா! என்ன? பீமனுக்கும் ஸுயோதனனுக்கும் கதாயுத்தம் நடந்தது, என்று சொல்கிறீர்?

சார். (கஞ்சுகியைப் பார்த்து) ஐயா! இவ்விருவரும் யார்?

கஞ்சு. அரசரிவரே யுதிஷ்டிரர்; இவ்வம்மை, பாஞ்சாலன் புதல்வி.

சார். அந்தோ! ஏனோ சொல்லப்புகுந்தேன். கொடிது, கொடிது!

தர்ம. (துக்கத்துடன்) சிறிது கேட்டவளவிலே, தமது வார்த்தை என்னுயிர் நீங்கும்படியான பெருந்துயரைத் தந்திட்டதே! பாலகனது உண்மைநிலைதான் என்னவோ?

சார். (தனக்குள்) உன்னுயிரை இழக்கச்செய்வதே என்முயற்சி. (ப்ரகாசமாய்) ஐயா! சுருக்கியே சொல்கிறேன். உற்றாரடைந்த துன்பத்தை விரித்துரைக்கலாகாது.

தர்ம. விரித்தோ தொகுத்தோ, விஷயத்தை விளம்பலாம்.

சார். பீமஸேனனும் ஸுயோதனனும் கலந்து பேரொலியெழுப்பி ஆரம்பித்த கதாயுத்தத்தில்,

த்ரௌ. (சிறிது தெளிந்து) பிறகு; பிறகு என்ன நடந்தது?

சார். பலராமன் வந்தடைந்தான். அவனெதிரில் நீடித்து நடந்தது போரும். சிஷ்யனுக்களித்தான் ஓர் குறிப்பை. அக்குறிப்பையேற்றுக் கௌரவேசனும், துச்சாஸனன் பகைவன்மீது, தீர்த்தனன் தன் பழியை.

தர்ம. ஹா! வ்ருகோதரா! (என்று மூர்ச்சிக்க)

த்ரௌ. ஹா! அண்ணலே! (என்று மூர்ச்சிக்க)

கஞ்சு. அந்தோ! குமாரா! பீமா! (என்று குழறி, தர்மபுத்ரரைத் தேற்றியவாறே) பெண்ணே! புத்திமதீ! நமது அரசியைத்தேற்று; முனிக்கரசே! சற்று அரசரைத் தேற்றிடவேண்டும் தாமும்.

சார். (தனக்குள்) அவ்விதமே செய்வன், உயிரை விடுவிப்பதற்கே. (ப்ரகாசமாய்) பீமனுக்கு முன்னோனே! ப்ருதையின் குமரனே! க்ஷணம் தெளிந்து நல்மனதுடன் இருத்தல் வேண்டும்; இன்னும் நான் சொல்லவேண்டியதுண்டு.

தர்ம. (தெளிந்து) முனிச்ரேஷ்டரே! சொல்லவேண்டியதுமுண்டோ?

சார். பின்னர், பீமன் கதியை யறிந்ததும், உதிரந்தோய்ந்துள்ள கதையை ஸோதரன் கையினின்றும் எடுத்து, அறைகூவி

யழைக்கும் கௌரவேசன் குரலைக் கேட்டு, வாஸுதேவன் தடுத்தும் கேளாது, குதித்தெழுந்து போருக்குச் சென்றான், உமது மூன்றாவது தம்பி கிரீடி. கதைப்போரிற் பழக்கமற்ற விஜயன் மரணமே யடைவானென்றறிந்து பலராமன், விஜயனையே நண்ணிய கண்ணனை, ஆங்கு இருத்தல் தகாதென்று வற்புறுத்தி, தன் தேரின்மீதேற்றிக்கொண்டு த்வாரகை சேர்ந்தான்.

துர்ம. ஹா! அர்ஜுனா! உன் அண்ணனுக்காகவேண்டி அவன் செய்தவாறே செய்யக்கருதி, காண்டீபத்தைத் துறந்தாயோ! பாவிநான் எவ்வகையில், என் உயிரைவிடுத்து இவ்வுடலம் துறந்து இன்பமடைவேன்.

த்ரௌ. (தெளிந்து) ஹா! இங்கே நடக்கிறதென்ன!

துர்ம. க்ருஷ்ணே! வேறென்ன? அரியதோர் கதையேந்திய உன் காதலன், பீமஸேனன் வீழ்ந்தனனும், பாபி துர்யோதனன் கதையால்.

த்ரௌ. அந்தோ! ஜடாஸுரனைச் சிதைத்து, பகாஸுரனை வதைத்து, ஹிடிம்பனுக்கோர் யமனாய், கீசகனுக்கோர் கூற்றுவனாய், ஜராஸந்தனையுமுயிருண்ட சிங்கமே! நாதா! பீமஸேனா! என் குழல்களை இனி யார் குவித்திடுவது? நாம்தானே குவித்திடவேண்டும். வீரன்குமரன் வீரன், வாய்மை தவறலாகுமா? நாதா! (என்று கீழேவிழுந்து மூர்ச்சிக்க)

துர்ம. ஹா! ஈதென்ன தீவினை! ஐயனே, பலராமா! உற்றாரென்றும் நினையாது, உன் தம்பிக்கும் விஜயனுக்கும் நெடுநாளாயுள்ள நட்பையும் நோக்காது, பாக்யமில்லா எனக்கென்றோ இப்பழி படைத்தனை! வீரர்க்குரிய வகையையும் துறந்தனை! (த்ரௌபதியை அணுகி) பாஞ்சாலீ! எழுந்திரு, எழுந்திரு. இப் பெருந்துக்கத்தின் பலனை இருவரும் ஸமமாகவே யடைவோம்.

த்ரௌ. (பித்தம் கொண்டதுபோல்) நாதா! துர்யோதனனது உதிரத்தால் நனைந்த கைகொண்டு, துச்சாஸனன் அவிழ்த்த என் கூந்தலை முடிய ஏனோ இன்னும் வரவில்லை? அடி புத்திமதீ!

உன்னை இரிலுமல்லவா என் நாதன் அன்று கூறியது? (கஞ்சுகியை நோக்கி) ஐயா! தேவகிஸுதன் அனுப்பிய செய்தி யென்ன? கூந்தலை முடித்திட ஆரம்பிக்கலாம் என்ரு? ஆனால் ஏன் தாமதம்? பூமாலைகளைக்கொண்டுவரலாம்; சீவிச் சிடுக்கெடுக்கலாம். சீக்கிரமாக நிறைவேற்றும், நாரணனது ஆணையை. ஏன் மயங்குகிறீர்? அவர் ஒருநாளும் பொய் மொழி சொல்லார். (சற்று நிதானித்து) ஹா! என்ன சொன் னேன். வேண்டாம், வேண்டாம். உயிர்துறந்த என் நாதனை இப்பொழுதே நாடிச்செல்வேன். (தர்மபுத்ரரை நோக்கி) அரசே! ஏன் தாமதம்? எனக்கென்று சிதையிட்டு அழலிடலாம்; தாமும் க்ஷத்ரியதர்மத்தைக்கொண்டு, தமது தம்பியின் உயி ருண்டவனை எதிர்த்துச் செல்லலாம். ஆனாலும், தமதிஷ்டம்.

தர்ம. உசிதமே யுரைத்தாள் பாஞ்சாலி. கஞ்சுகி! அன்னாள் கோறியவண்ணம் சிதையொன்றை யமைத்திடு. கொண்டுவா என் தனுஸை. (யோசித்து) வேண்டாம், வேண்டாம். அதைக் கொண்டு போர்புரிந்து பின்னொருவாறு ஐயம்கொண்டு செய் வதுதானென்ன? வேண்டாம். பீமனது உதிரம் சிந்திய கதையையே கையிலெடுத்து விஜயனைப்போலவே நானும் போர்புரிவேன். வில்லைக் கையிற்கொள்ளாது விடுத்தலே சிறந்தது. இக்ஷணமே செல்வேன்.

சார். வேந்தே! நீர் அங்குச் செல்வதும் வீணே. எங்கேயேனும் சென்று உயிர்துறந்திடில் அதுவே மேலதாகும்.

கஞ்சு. என்ன மனஸ்ஸு தமக்கு! ராக்ஷஸ ஹ்ருதயமா?

சார். (தனக்குள்) ஓஹோ! ஒருகால் இவன் என்னை அறிந்தனனோ! (ப்ரகாசமாய்) ஐயா! அர்ஜுனனும் ஸுயோதனனும் கதை கொண்டு நடத்தும் யுத்தத்தில் அவரவர் வலிமை நானறி வேன். பாபம்! இவரடைந்த துக்கத்தைப் பெருக்கவேண் டாமென்றே தடுத்தேன்.

தர்ம. (கண்ணீருடன்) மஹரிஷே! அன்புடனேதான் தாம் கூறியது.

வீமார்ச்சு னர்பாரில் வீழ்ந்துகிடக் கப்பகைவர்
தாமார்த்து நின்று தருக்குமிதை யான்பொறுக்கேன்
ஏமாறு முன்துயர்க்கும் யான்கா ரணமதனால்
நாமாகத் தீவீழ்ந்து நம்முயிரை நீப்போமே.

த்ரௌ. ஐயா! ஏன்? சிதை யெரியட்டும். என்ன? அரசரது கட்டளையை நிறைவேற்றுவார் ஒருவருமில்லையா?

சார். பரதகுலத்து மங்கையர்க்கு வழக்கமேதான் பதியுடன் மரணமடைவதென்பது.

தர்ம. மஹரிஷே! எமது வார்த்தையைக் கேட்பவர் ஒருவருமில்லை; ஆதலின், தாமேனும் தீயைமூட்டி எமக்கோர் அருள் புரியலாகாதா?

சார். அவ்வாறு செய்வது எம்போன்றவர்க் கியல்பல்ல. (தனக்குள்) என் எண்ணம் நிறைவேறியது; எவர்க்கும் தெரியாமலே தீயும் வைத்தாய்விட்டது. (ப்ரகாசமாய்) அரசே! இனி இங்கிருப்பதற்கு எம்மால் இயலாது. (செல்லுதல்.)

தர்ம. க்ருஷ்ணே! ஒருவரும் நமது சொற்படி நடத்துவதாகக் காணேம். ஆனாலுமென்ன? நானே கட்டைகளை யடுக்கி அனலிடுகின்றேன். விரைவில் நாம் சென்று ஆஹுதியாக நமது ஆத்மாவை யளித்து ஆனந்தம் பெறுவோம்; வா. (என்று செல்ல எத்தனிக்க)

புத்தி. (அவர்கள் முன்னே வீழ்ந்து)
உலகங் காக்கு முயர்தே வதைகாள்
வலமிகு திசைகா வலர்கா ளுங்கள்
கண்டிறந் திவரைக் காக்கலா காதோ
மண்டழல் வீழ மனந்துணிந் திட்ட
கொற்றவ ரிவரோ குவலயம் வென்று
சுற்றமோ டிராஜ சூயமி யற்றிச்
செந்தீக் கடவுளைத் திருப்திசெய் தூட்டிய
சந்திர வம்சத்துத் தரும மூர்த்தி
காண்டவ வனத்தையக் கடவுட் கருத்திய
ஆண்டகைக் கண்ணன் அரசர் பெருமான்
ஈங்கு நிற்கு மிவளோ பேரழல்
வீங்கிய யாக வேதியின் முளைத்த
தீக்கொழுந் தனைய தேவி பாஞ்சாலன்
பாக்கிய மனைய பாவையிவ் விருவரும்
வீணிற் றீக்கிரை யாதலும் விதியோ
காணி லிவரைக் காப்பவ ரிலையோ.
தருமதே வதைநீ தானிச் சமயம்
உரிமையோ டிருயிர்க் குதவல்வேண் டுவனே.

கஞ்சு. (பரபரப்புடன்) ஹா ஹா! இழிஞன் கௌரவகுலத்து வேர்ப் புழு, உதிரத்தால் நனைந்த சிவந்த ஆடையுடன், கையிற் கதையேந்தி, காலனைப்போல் இங்கேயே வருகின்றானே! என்செய்வோம்?

தர்ம. ஹா தெய்வமே! நீ நினைந்தது கைகூடியதே! வத்ஸா, காண்டீபா! (மூர்ச்சித்தல்.)

கஞ்சு. ஐயோ! இனிக் கஷ்டமேதான். இறைவர் இங்ஙனமிருக்க, பீமனும் விஜயனும் விண்ணுலகேக, இனிக் காப்பவர் உளரென்னு மாசையுமுண்டோ! பாஞ்சாலன் புதல்வியை இப்பொழுதே சிதையின்பாலழைத்துச் செல்வதே உசிதம்.

தர்ம. (எழுந்து) பாஞ்சாலீ! பயப்படாதே. ஜயந்தரா! அந்தப் பாபியா வருகிறான்? கொண்டுவா இப்பொழுதே, எனது வில்லையும் தூணீரத்தையும். துர்யோதனா! பாபி! வா, வா. கதைவலிமைகொண்ட இறுமாப்பா இது? அதெல்லாம் என் பாணத்துக்குமுன் நிற்குமா? இப்பொழுதே உன்னை ஒழிக்கிறேன்; வா, வா.

(ரக்தத்தினால் நனைந்த சரீரத்துடனும், கதையுடனும், பீமன் ப்ரவேசித்தல்.)

பீமன். வஞ்சமிகு மரக்கனலேன் வலிமிக்க பூதமலேன் மாயம் வல்ல [போன்
நெஞ்சுடைய பகையழித்து நெடுங்குருதி தோய்ந்தீதோ நிற்கின்றேற
வஞ்சினமாங் கடல்கடந்தேன் மதிமயங்கி வீரர்குலம் வந்தீர் வீணே
அஞ்சுவது மேனோநீர் அருஞ்சேனை யிடைப்பதுங்க லழகோ வம்ம.
ஸமந்த பஞ்சகத்தில் ஸஞ்சரிக்கும் வீரர்காள்! சொல்லுங்கள், பாஞ்சாலி எவ்விடத்திலிருக்கின்றாள்?

கஞ்சு. பாஞ்சாலன் பெண்மணியே! சீக்கிரம் சிதையில் வீழ்ந்து உயிர்துறப்பதே சிறந்தது.

த்ரௌ. (எழுந்து) ஐயோ! சிதைதானெங்கே? நான் இன்னும் அந்த அடையவில்லையே! ஹே, க்ருஷ்ணா! இவ்வருளேனும் புரியலாகாதா!

தர்ம. ஸமயத்தில் என் தனுஸைக் கொண்டுவருபவர் ஒருவருமில்லையா? இருந்தாலென்ன? இக்கரமகொண்டிவனை வலியத் தழுவிக், குத்திக்குமைத்து அழலில் அமிழ்த்திடுவேன்.

கஞ்சு. அம்மணீ! துச்சாஸனன் செய்த பழிக்குப் பழிவாங்கும் ஆசை இனியில்லை. கண்ணினை மறைக்கும் குழலைக் குவித்து, சிதையை சீக்கிரமடைவதே நலம்.

தர்ம. க்ருஷ்ணே! இழிஞன் ஸுயோதனன் இறக்காமலிருக்கக் குழலைக் குவிக்கலாகுமோ?

பீமன். பாஞ்சாலீ! துச்சாஸனன் குலைத்திட்ட வேணியை, நான் உயிருடனிருக்க நீயே குவித்திடலாகுமோ? வேண்டாம்; நானே குவித்திடுகிறேன். (த்ரௌபதி பயந்து பின்செல்ல) ஐயோ! பேதைப்பெண்ணே! நீ போவதுதானெங்கே? (என்று த்ரௌபதியை யணுக)

தர்ம. (குறுக்கே சென்று பீமனை இறுகக்கட்டி) ஆஹா! பீமனையும் விஜயனையும் கொன்றமையால், வெறிகொண்டனையா? பாவீ! ஸுயோதனு! பிறந்தநாள்முதல் நீ படைத்ததெல்லாம் பகை. இன்றுதான் என்கையிற் சிக்கினை. இனி நீ போவதுதான் எங்கேயோ?

பீமன். ஈதென்ன! என்னை ஸுயோதனனென்று எண்ணியன்றோ ஐயன் கோபங்கொண்டு இரக்கமின்றியே கட்டுகின்றனர். ஆனல், அனுபவிப்போம் இந்த விளையாட்டையும்.

கஞ்சு. (ஸந்தோஷத்துடன்) வேந்தே! வேந்தே! இதோ வந்திருப்பது சிரஞ்ஜீவி பீமஸேனனேதான். அந்தப்பாபி ஸுயோதனனது உதிரம் உடம்பெல்லாம் பெருக, இன்னுனென்று அறியமுடியவில்லை. விட்டுவிடுங்கள்; இனி ஸந்தேகமே வேண்டாம்.

புத்தி. தேவி! திரும்பிப்பாருங்கள். தமது நாதன் தன் சொற்படி நடத்தி, தமது கூந்தலை முடிய, தம்மையே தேடி வந்திருக்கிருர்.

த்ரௌ. ஐயோ! ஏனே இந்த வீண் வார்த்தை.

தர்ம. ஜயந்தரா! என்ன சொன்னுய்? பீமஸேனனென்ருே! அந்தப் பாபி ஸுயோதனன் அல்லவா?

பீமன். அண்ணலே! அஜாதசத்ரோ! அவன் இன்னமுமிருக்கின்ருனே? அந்தப் பாதகனது மெய் வையகத்தில் வீழ்ந்திட்டது. அவன் உதிரம் என்னுடலுக்கோர் நற்சாந்தமாயது.

அவனது திருவும் திறலும் கடல்சூழ்ந்த இப்புவனியுப் தமக்கேயாயின. அவனது ஆட்களும் அன்பரும் போரெனும் பேரழலுக் கிரையாயினர். பொட்டையன் பெற்ற அந்த புல்லியனுக்கு மற்றும் விஞ்சியது, பழியோடு சார்ந்த அவனது பெயரொன்றேதான். இனி அந்தப் பாபியை நினைக் கவும் வேண்டுமா!

(தருமன் கைகளைத் தளர்த்தி பீமனைப்பார்த்து, கண்ணீரைத்துடைத்து நிற்க, பீமன் அண்ணனது பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரிக்க)

தர்ம. அப்பா! சொல், சொல். உண்மையேதானு? நீயும் கிரீடியும் உயிருடன் பிழைத்திருக்கிறீர்களா?

பீமன். இறையே! பகைவரை வென்று அரசாகத் தாமிருக்க பீமன் உயிர்த்தேயிருக்கின்றான்; அர்ஜுனனும் அப்படியே.

தர்ம. பகைவரை வென்றதிருக்கட்டும்; அப்பா! பகாஸுரனைக் கொன்ற எனது தம்பி நீயே தானு?

பீமன். இறைவனே! அவனே.

தர்ம. ஜராஸந்தனது மார்பமெனும் மடுவில், அலைத்திடும் உதிரக் கடலில், அன்று உலாவிய மகரமேதானு நீ?

பீமன். அண்ணலே! அவனேதான். எனக்கு ஒரு நொடிப்பொழுது அனுமதி தரவேண்டும்.

தர்ம. இன்னும் செய்வதில் மிகுதியாயுள்ளதென்ன?

பீமன். இன்னும் மிகுந்துள்ளது எல்லாவற்றிலும் பெரியது. ஸுயோதனனது ரக்தத்திறைற் சிவந்த இக் கைகொண்டு, துச்சாஸனன் கலைத்திட்ட, இப்பாஞ்சாலியின் கூந்தலைக் குவித்திடவேண்டியதே.

தர்ம. செல்; சீக்கிரம் செல். இந்நாளாய் இடுக்கண்பட்ட இம்மெல்லியல், இன்று குழலைக் குவித்தலாலுண்டாகும் குதூஹலத்தை இக்ஷணமே அடையட்டும்.

பீமன். தேவி! பாஞ்சாலன் பெண்ணரசே! கண்டனையோ? பகைவரும் அழிந்தனர்; இனி இன்பம்கொண்டு இனிதே வாழ்ந்திடலாம்; எல்லாம் ஈசனருள். ஹா! என்னைக்கண்டு இவ்வண்ணம் நடுங்குவது மேனே?

நிரந்த பேரவை நின்றுநி லுரிந்தவு னெஞ்சுதி ரங்குடித் தேனிக்
கரந்த ஞல்மன மாரவென் கைதொடுகாதலி கௌரவன் றன்[மெய்யில்
துரந்த வென்கதை யடியிறு லவன்பெருந் தொடைவரு சோரியென்
பரந்த செங்குமுன் பரிபவ மாந்தழல் பாரினி லணைத்திடற் கின்றே.

புத்திமதி! பாண்டவர் பெண்டிரைப் பரிஹஸித்த பானு மதியென்பாள்; அவள்தான் இப்பொழுது எங்கேயோ? பெண்மணீ! வேள்வியின் வேதியில் உதித்த உத்தமீ! அன்றொருநாள் அறைந்தனனன்றோ! நினைந்துபார். "எஞ்சலி லாவலி கொண்டுசு ழற்றி" (என்பதைச் சொல்லுதல்.)

த்ரௌ. நாதா! நினைத்திருப்பதேயல்லாது, ஐயனருளால் அதனையே அனுபவிக்கின்றேனே.

பீமன். (கூந்தலைத் தொட்டு) குருடன் குலத்துக்கோர் காளராத்ரியான குழலே, குமரியே! இனிக் குவித்திடலாம். அதனை துச்சாஸனன் அவிழ்த்ததனலன்றோ அக்குலமும் குலைந்தது.

த்ரௌ. கூட்டி முடிப்பதை நெடுநாளாக மறந்துவிட்டேன். தமது இன்னருளால் இனிக் கற்றுக்கொள்வேன்.

(புத்திமதி கூந்தலைக் குவித்துக்கட்டுதல்.)

(திரைக்குள்)

இங்ஙனம் பெருகிய பாரதப்போரில் மாய்ந்து தீய்ந்து விஞ்சிய பூவேந்தர்க்கு க்ஷேமமுண்டாகுக. குருடன் குமாரும் க்ருஷ்ணையின் கூந்தலைக் கலைத்ததால் இழந்தனர் உயிரை. அவர்கட்கோரன்பாய மங்கையரும், ப்ரதியாக அவிழ்த்தனர் தம் கூந்தலை; குலைந்து நின்ற குழலையும் குவித்தனள், க்ருஷ்ணையும்; வேந்தன் மரபெல்லாம் ஓங்கி வளர்க.

தர்ம. பாஞ்சாலீ! அதோபார்; விண்ணுலாவு ஸித்தரும் யக்ஷரும் உன் வேணிமுடிந்த திருவிழாவைப் பார்த்து நிற்கின்றனர்.

(க்ருஷ்ணனும் அர்ஜுனனும் ப்ரவேசித்தல்.)

க்ருஷ். பாண்டவகுலத்துக்கோர் மதியாய மன்னவனும் அவன் பின்னவரும் வாழ்க; யுதிஷ்டிரன் வாழ்க.

தர்ம. ஆஹா! ஐயன் தாமரைக்கண்ணனும், செம்மல் விஜயனுமா! இறைவனே! விஜயனுக்கல்லாது வேறொருவர்க்குத் தெரிவல்லோனுய புருஷோத்தமன், தானே மங்களங்கள் செய்வனே! படைத்து உண்டுமிழ்ந்தெடுக்கும் முதற்பெருங்கடவுளே

பெருமைக்கும் சிறுமைக்கும் எல்லையாய தூயமூர்த்தியே! சிந்தைக்குமெட்டாச் செல்வனே! இறப்பிலியாய இறைவனே! நின்னைச் சிந்தைதன்னுள் நண்ணியே துன்பம் துறப்பர் மானிடர்; கண்ணுரைக் கண்டவரைப்பற்றியும் பகரவோ!

த்ரௌ. தம்மானங் கெடப்பாவி சபைநடுவே துகிலுரிந்த சமயத் தேங்கி
விம்மாநின் றலறியவென் மெய்ம்மானங் காத்தளித்தாய் விமலா வன்று
தெம்மாய என்கணவர் செருவதனிற் செயசீல ராகி யெங்கள் [றே.
பெம்மானே யுனதருளாற் குழல்முடியும் பெரும்பேறும் பெற்றே னின்

க்ருஷ். அரசுக்குமரசாய யுதிஷ்டிரா! இதோ நகுல ஸஹதேவரை முன்னிட்ட இவர், திஷ்டத்துய்மன் முதலானோர். பின்னுமிவர், நின்னுணையைச் சிரமேற்கொண்டு நடத்தும் மாகதர் மச்சர் முதலானோர். அனைவரும் பொற்குடங்களில் உனக்கு மஞ்ஜனம் கொணர்ந்துளர். அப்பாவி சார்வாகன், தீயவரக்கன், உன் உள்ளத்தைச் சிதைத்தான், என்று கண்டு அர்ஜுனனுடன் விரைவில் வந்தேன்.

தர்ம. என்ன! சார்வாகனு! அரக்கனு!

பீமன். எங்கே அந்தப் புண்ணியருக்கோர் பழிவிளைத்த புல்லியன்? என் ஐயன் சிந்தையைச் சிதைத்தவன்? எங்கேயவன்?

க்ருஷ். அவனை நகுலன் ஒழித்துவிட்டான். இறைவனே! இன்னும் இன்பம்தான் எதுவோ?

தர்ம. ஈசனுக்கு அருளுண்டானுல், அவன் அளித்தற்கு அரிதும் உளதோ? நானே கேவலம் மனிதரது மாண்பையே நாடி உறுகின்றேன் இன்பம். தாமே என்னை இறைவன் என்று, பகரவும் பெற்றேன்; இன்னும் நான் வேண்டுவதுமுண்டோ? அருளாளா! பெருமானே! அருளிருந்தால்,

குற்றமொடு நோய்நீங்கிக் குவலயத்தோர் பெருவாழ்வு கொள்க மேலா
யுற்றபுரு ஷோத்தமனு முன்பாலன் பாலுலகம் உய்ந்து வாழ்க
நற்றவரெ லாமகிழ நன்மைதரு மன்போடும் நானி லத்தைக்[மன்னே.
கற்றவர்கள் பெருந் துணையாற் காவலனும் நெறியொழுகிக் காக்க

க்ருஷ். ததாஸ்து.